# சில கணங்கள்

## கவிதைத்தொகுப்பு



பவானி


சில கணங்கள்
கவிதைத்தொகுப்பு
பவானி

திருமதி. பவானியின் கவிதைகள்

நூலாசிரியர்: திருமதி பவானி சற்குணசெல்வம்

பதிப்புரிமை: ஆசிரியருக்கே

முதல் பதிப்பு: 2019

இதழ் வடிவமைப்பு: க. ஸ்ரீதாஸ்

தொடர்புகளுக்கு

திருமதி. பவானி சற்குணசெல்வம்

மின்னஞ்சல்: **bhawany65@gmail. com**



அகிலத்தில்
என்னை
அறிமுகப்படுத்திய
பெற்றோருக்கு

# சமர்ப்பணம்

# அணிந்துரை

## விடியலுக்கான விதை

அழகிய நிவைுகளால் சமைக்கப்பட்ட செம்மையான வழித்தடத்தில்தான் பயணிக்க நினைக்கிறது மனிதம். ஆனால் வாழ்வியல் சதுரங்கத்தில் பதியப்படும் காய்கள் ஏற்றம் பெற்று முன்னேறுவதோ எதிர்பாராது வெட்டப்படுவதோ நம் கையில் இல்லை. மகிழ்ச்சியில் திளைக்கும் மனம் துயரத்தை ஏற்கவிரும்புவதில்லை. துவண்டு விடுகிறது. என்றாலும் காலத்தோடு மல்லுக்கு நிற்காமல் இடர்பாடுகளை எப்படியேனும் கடந்து விடத்-துடிக்கும் மனிதத்திற்கு ஊக்க சக்தியை அளிப்பதாக அமைகிறது பவானியின் “சில கணங்கள்” எனும் இக்கவிதைத்தொகுப்பு.

எண்பதுகளிலிருந்தே ஈழ மண்ணில் வாழ்ந்த தமிழர்கள் போரையும் போர் சார்ந்த அழிவுகளையும் கண்டவர்கள். தம் உறவுகளை இழந்து, மண்ணை இழந்து,முகவரி இழந்து புலம் பெயர்ந்தவர்களும், புலம் பெயர்க்கப்பட்டவர்களும் எண்ணற்றோர். ஈழ மண்ணின் வாதைகளையும் வலிகளையும் பேசும் கவிஞர்களு-க்கு மத்தியில் இவர் எஞ்சிக்கிடக்கும் வாழ்வுக்கு நம்பிக்கையூட்டு கிறார். நடந்தவற்றை நினைத்துப்புலம்புவதை விட எஞ்சியிருக்கும் வாழ்க்கையப் புதிதாய்த் தொடங்குங்கள் என்கிறார்.

“நடந்தவை நடந்தவைதான்,
முடிந்தவை முடிந்தவைதான்,
சொன்னவை சொன்னவைதான்,
நடந்து முடிந்தவை திரும்பிப்
பெற முடியாதவை
ஒரு கசப்பான முடிவின் பின்
எப்பொழுதும் ஒரு
புதிய ஆரம்பம்
எமக்கும்
நாம் போராடினால்
வாருங்கள்
புதிதாக ஆரம்பிப்போம்.

முதலிலிருந்து
மன்னித்து
மறந்து...”

எனும் வரிகள் வலிகளை மறந்து வாழ அழைக்கிறது. கவலைப்படுவதால் என்ன ஆகப்போகிறது அந்த நாள்தான் கடந்து போகும். கவலை தீராது என்று அறிவுறுத்தும் இவர்

“சலித்துப்போன சில கணங்கள்
வெறுத்துப்போன மனிதர்கள்
ஆனால் மழைக்குப்பின்தான்
எப்பொழுதும் சூரிய உதயம்”

என்று எளிய நடையில் வாழ்வுக்கான நம்பிக்கை விதைகளை தம் கவிதைகளில் தூவிச்செல்கிறார்.“வாடாமலர்” எனும் கவிதை கவிஞரின் அனுவமாய் மிளிர்கிறது.

அன்றுதான் உனக்கு சத்திர சிகிட்சை நடந்த நாள்
நான் உன்னிடம் வருவதாகக்கூறியிருந்தேன்
எந்த நிலையில் இருப்பாயோ என என் மனம் பதைத்தது
மயங்கியிருப்பாயோ? வலியால் துடிப்பாயோ?, அழுவாயோ?...

என்று தொடரும் கவிதையில்,

“பல மலர்க்கொத்துக்களின் நடுவே நீயும்
ஒரு மலராக கட்டிலில் அமர்ந்திருந்தாய்
உனக்கு விருப்பமான மலர்க்கொத்தை
உனக்குப்பரிசளித்தபோது
அதை நீயே எழுந்து சென்று சாடியில்
நீர் நிரப்பி நேர்த்தியாய் வைத்தாய்”

என்று வாடாமலர் நிகழ்வைக்காட்சிப்படுத்தியுள்ள விதம் அழகியல். தன் வாழ்க்கை மீறிய சமூக அவதானிப்பை இவரது கவி தையில் காண முடிகிறது. காதலில் கட்டுண்டு தவிக்கும் இளந்தலை முறையின் உளநிலையை “நம்பமுடியவில்லை” எனும் கவிதையில்,

“செந்நீர் கடந்தாய்
சேற்றில் புதையுண்டாய்
வதைமுகாம் கடந்தாய்
வலிகொண்டெழுந்து வான் கடந்தாய்
நாடு கடந்தாய்
எல்லை கடந்தொரு கைதியுமானாய்
எல்லாம் கடந்த நீ
காதல் தோல்வியினால்
உன் உயிரை மாய்த்தனை
என்னால் நம்பமுடியவில்லை”

என்று பதிவுசெய்கிறார். தேயிலைத் தோட்டத் தொழிலாளிகளின் அவல நிலையினை “கொழுந்து” எனும் கவிதையில்

“குனிந்து நின்று கொழுந்தெடுத்து
இடுப்பொடிஞ்சு போனதடி
தோட்டச்சுத்துங்கங்காணி
தொரத்தி தொரத்தி வாறாண்டி

உழைச்சுழைச்சு ஓடஞ்சு போனோம்
காலில் போடும் செருப்புமானோம்
தோட்டக்காரத்துரைமாருக்கு
ரேஸ் ஓடும் ஜீப்புமானோம்”

என்று எளிய மனிதர்களின் வாழ்வியல் அவலத்தை மிக யதார்த்தமாக சொல்லிச்செல்லும் முறையில் அவரது நேயமும் உழைப்பைச்சுரண்டும் முதலாளிகளின் மீதான வெறுப்பும் வெளிப் படுகிறது. மனித மனம் என்பது மர்மக்கடல் அங்கே என்ன இருக்கி றது என்பதை எவராலும் கண்டறியமுடியாது. எல்லாவற்றையும் எல்லோரிடமும் சொல்லவும் முடியாது. அப்படி சொல்ல வொண்ணா-வலிகளின் வீரியத்தை குறிப்பிடுகையில்,

எல்லா வலிகளையும் வார்த்தைகளால்
வெளியே சொல்லிவிட முடியாது
ஓசையின்றி மௌனமாகவே அழுகின்ற

ஓராயிரம் வலிகள் இங்கே
எல்லோர் இதயத்திலும் உண்டு,
என்று மனித மனங்களின் இயல்புரைக்கிறார்.

தான் வாழ்ந்த, வாழுகின்ற சமூகம் சார்ந்த மக்களின் மீதான அன்பையும் அதன் ஊடாக விளைந்த அக்கறையையும்,அவர்கள் வாழ்வுக்கான நம்பிக்கையையும் பேசியுள்ள கவிஞர், சமூக அவலங் களை எடுத்துரைத்து அதற்குச்சாட்டையடி கொடுத்திருப்பதையும் இக்கவிதைத்தொகுப்பு முழுவதும் காண முடிகிறது.

ஈழத்தில் பிறந்து தற்போது நெதர்லாந்தில் வாழ்ந்து வரும் பவானி விவசாயத்துறையில் பட்டம் பெற்றவர். சிறந்த மொழி பெயர்ப்பாளராக விளங்குகிறார். இவர் கனடாவில் வாழ்ந்து வரும் கவிஞர் சேரனின் கவிதைகள் பலவற்றைத் தேர்ந்தெடுத்து அதனை டச்சு மொழியில் “கடலின் கதை”, “அன்பு திகட்டாது”என்னும் தலை ப்புகளில் இரு நூல்களாக மொழி பெயர்த்து வெளியிட்டுள்ளார்.

சிறந்த பல கவிதைகளை உள்ளடக்கியிருக்கும் இக்கவி தைத்தொகுப்பு இவரது முதல் முயற்சி எனவே விமர்சனங்களுக்கு அப்பால் நின்று வாழ்த்தி வரவேற்போம். ஈரம் நிறைந்த தடாகத்தில் நறுமணம் மிகுந்த கவிதை மலர்கள் பூத்துக்குலுங்க இதயம் கனிந்த வாழ்த்துகள்.

கவிஞர் பொ.திராவிடமணி

தஞ்சாவூர்,

இந்தியா.



# அறிமுகவுரை

தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந்தார்

தாம் கற்ற கல்வியால் எவர் ஒருவர் இன்புறுகிறாரோ அக்கல்வியால் உலகத்தார் இன்புறச் செய்வதே அவரது சிறந்த கடமையாகும். திருமதி. பவானி சற்குண செல்வம் அவர்கள் இதற்கு எடுத்துக்காட்டாக தான் கற்ற கல்வியை பிறருக்கும் பயனுள்ளதாக்கிய பெருமைக்குரியவர்.

இலங்கையில் விவசாய விஞ்ஞானத்துறையில் பட்டம் பெற்று அங்கு விரிவுரையாளராகவும் பணியாற்றியவர். திரு- மணத்திற்கு பின் நெதர்லாந்திற்கு புலம்பெயர்ந்து டச்சு மொழியை திறம்படக்கற்றவர். இங்கு உளவியல் மற்றும் சட்டத்துறையில் கல்வியை மேற்கொண்டு பட்டம் பெற்றவர்.

விடாமுயற்சியும் கல்வியை தொடர்ந்து கற்கவேண்டும் என்ற ஆர்வமும் கொண்டவர் பவானி கல்வியைத் தொடர்ந்து நெதர் லாந்தில் அரச நிறுவனங்களிலும் அரச சார்பற்ற நிறுவனங்களிலும் பணியாற்றியவர். பின் அகதிகளுக்கான உதவிக்காரியாலயத்திலும் மொழி பெயர்ப்பாளராகவும் பணியாற்றி வருகிறார்.

தமிழில் மட்டுமன்றி டச்சு மொழியிலும் சிறப்பான திறமைகளைக்கொண்ட பவானி அவர்கள் புலம் பெயர்ந்த நாடுகளில் சிறுவர்களின் தமிழ்வளர்ச்சியில் அயராது பாடுபட்டவர். தமிழ் பாடசாலையில் ஆசிரியராகக்கடமையாற்றி மாணவர்களின் நல்லபிப்பிராயத்தைப்பெற்றவர்.

தமிழ் மாணவர்களுக்கு நாடகம் நாட்டியம் இசை போன்றவற்றை பயிற்றுவித்து அவர்களை முன்னேற்றியவர் தமிழைப்போன்று இந்து சமயத்திலும் அதீத பக்தி கொண்டவர் புலம் பெயர்ந்த மக்கள் தமிழையும் சமயத்தையும் இரு கண்களாக பேணிப்பாதுகாக்கவேண்டும் என்பதை குறிக்கோளாகக் கொண்டவர்.

நல்ல இசை ஞானம் கொண்ட பவானி அவர்கள் ஒரு சிறந்த பாடகியாவார். தன் குரல்வளத்தால் பலரது மனதைக்கவர்ந்தவர் கவிதை எழுதுவதில் ஆர்வமுள்ளவர்.

பிரபல ஈழத்துக்கவிஞர் திரு சேரன் அவர்களது கவிதைகள் சிலவற்றை தேர்ந்தெடுத்து “கடலின் கதை”“அன்பு திகட்டாது” என்ற தலைப்புகளில் கவிதைத்தொகுப்புகளை டச்சுமொழியில் மொழி பெயர்த்து வெளியிட்ட பெருமைக்குரியவர்

செயற்திறனும் ஊக்கமும் நிறைந்த பவானி அவர்கள் பல துறைகளில் சித்தி பெற்றவராய் பெண்ணினத்தின் பெருமைக்குரியவராய் திகழ்கிறார்.

சில கணங்கள் என்ற கவிதைத்தொகுப்பை வெளியிடும் கவி தாயினி திருமதி பவானி அவர்களை முதலில் மனதார வாழ்த்து வோம் வலிகளையும் சோகத்தின் சுவடுகளையும் கொடுமைகளை யும் கண்ட வாழ்வில் காயங்களை ஆற்றி மயிலிறகாய்த் தடவி தட்டிக்கொடுத்து எட்டி நடை போட வைக்கும் கவிதைகளை தன் எழுத்தாற்றல் வரிகளாக நமக்கு தந்துள்ளார்.

எளிய நடையில் அனைவரும் படித்துச் சுவைக்கக்கூடிய அருமையான கவிதைகள்.கவிதாயினி திருமதி பவானி அவர்களது எழுத்தாற்றல் மென்மேலும் சிறக்க அவர் புகழ் பரவ மனம் நிறைந்து வாழ்த்துகின்றேன்.

வாழ்க தமிழ் வளர்க உம் பணி.



நன்றி

கவிதாயினி நிரஞ்சலா நிரா

நெதர்லாந்து.

# வாழ்த்துரை

வாழ்வியலை நேசிக்க வைத்து,
வடிவங்களால் வண்ணங்கள் சேர்த்து,
மனங்களில் மகரந்தங்களைப்பிணைத்து,
இதயங்களில் இன்பங்களை இணைத்து,
இனிதாய் உதயமாகும் பொழுதுகள்.

சிந்தனை தொட்டு சிந்தையில் மலர்ந்து,
மொழிகளைத்தொலைத்த மௌனங்களுக்குள் ஒளிந்து,
ஓராயிரம் உணர்வுகளை உசுப்பி விடுகிறது
ஒவ்வொரு சிந்தனையாளரையும்.

படைப்பாளரின் ஆர்வத்தேடல்
அன்பில் தொடங்கி,ஆசையில் கலந்து,
அறிவுரைகளால் சாமரம் வீசி,
இமைகளையும் மெல்லப்பூப்பெய்த விட்டு,
இடறாமல் நகர்கிறது கவி வரிகள்.

மனங்களின் ஓரங்களில் ஒடுங்கி தேங்கிப்போன
சில ஈர நினைவுகள் சிலிர்ப்போடு சலசலத்து,
வெளிப்படையான பூரிப்போடு பரிணமித்து,
தனக்கான ஒரு திறந்த சாலையில்
பயணிக்கிறார் இக்கவிதைகளின் படைப்பாளர்.

புரியப்படாமலே புதைந்து போவதற்கும்,
அறியப்படாமலே அமிழ்ந்து போவதற்கும்,
அனுபவங்கள் நிராகரிக்கப்பட்ட பாடமல்ல,அது
பதிவுகளால் பகிரப்பட வேண்டிய வேதங்கள் என
பகிரங்கமாக பறைசாற்றியுள்ளார்.

புதுமையைத்தேடும் புதிய பாதையில் பல
தூர நோக்குகளையும் இலக்காகக்கொண்டு,
சமூக பிரதிபலிப்புகளும் பளிச்சிட வைக்கும் இப்
படைப்பாளரது விழிப்புணர்வுகள் பலரையும் நாடி
படைப்புகளால் பயணிக்க வாழ்த்துக்கள் பல கோடி.



என்றென்றும் தமிழோடு,
நெதர்லாந்தின் மலையக எழுத்தாளர்.
திருமதி சுஜி ரமேஷ்.

# வாழ்த்துப்பா

ஆலமரமும் நீலக்கடலும் பச்சைநெல் வயல்வெளியும்
அழகு மலர் சோலைகளும் சுந்தர மொழியும் கொண்ட
ஈழமணித்திருநாட்டின் அளவையம்பதி உதித்த பூவையே
பவானியெனும் அழகு நிறை மாதுவே
தேன் மதுரக்குரலெடுத்து தமிழ்ப்பாடல் நீ படித்தால்
பால் குடிக்கும் பாலகரும் பசி மறந்து சிரித்திடுவர்
பக்குவமும் சொற்பெருக்கும் பண்பாடு காத்து நிற்கும்
நின் தமிழ்ப்பணி கேட்டால் ஒல்லாந்தரும் உளம் வியப்பர்

பள்ளிப் பருவம் முதல் பல்கலைக்கழகக்காலம்வரை
எண்ணற்ற திறமை கொண்டு ஏற்றமுடன் நடைபோட்டாய்
துள்ளி நடை போடவைத்தாய் தமிழ் நாடகக்கலைதனை
எள்ளி நகையாடும் மாந்தருக்குச் சவுக்கடியும்
அள்ளி அரவணைக்க யாருமின்றி நிற்போர்க்கு உதவிடவே
நற்பணியாய் மனிதநேய செயற்பாட்டிற்கும் கைகொடுத்து
தெள்ளு தமிழுக்கு பெருமை சேர்க்க சேரனின் கவிதைகளை
“கடலின் கதை” “அன்பு திகட்டாது” என டச் மொழியில்
வெளியிட்டாய் நீ வாழி!

எல்லைகளைக்கடந்துவந்து ஒல்லாந்து நாட்டில்
குடிபுகுந்து எல்லோருடனும் இணைந்து வாழ்ந்தாலும்
எண்ணற்ற பணிதனை என்நாளும் ஆற்றினாலும்
தணியாது தமிழ்மீது கொண்ட பற்று அது
துணிவோடு நீ படைக்கும் இந்த “சில கணங்கள்” எனும்
கவிநூல் உயிர்மூச்சாய் வெளிவரும் நிலைகண்டேன்
செல்வ விநாயகனின் அருளோடு இக்கவிநூல் இலக்கிய
உலகில் சிறப்புடன் வலம்வர வாழ்த்துகிறேன் வாழியவே!

என்றும் அன்புடன்
திருமதி. விமலாதேவி சிவநேசன்
கவிதாயினி சொல்லின் செல்வம்
முன்னாள் ஆசிரியர் தெல்லிப்பளை
யூனியன் கல்லூரி.



# வாழ்த்துகிறேன்



இளையோர்களுக்கான கவிதைத்தொகுப்பு

இத்தகைய தகவல் என்னை ஒரு கணம் விழி உயர்த்தி காண வைத்தது. இவரது இந்த முயற்சியானது சிறப்புறும் என்பதில் சந்தேகமில்லை. பவானி தம்பிராஜா அவர்களை ஒரு தடவை நேரில் சந்திக்கும் தருணம் அழகாக அமைந்திருந்தது.

ஆளுமை நிறைந்த பெண் படைப்பாளி. சுத்த இசை ஞானமுள்ள பாடகி. எமது அடுத்த தலைமுறைகளை மனதில் நிலை நிறுத்திய ஒரு கவித்தொகுப்பு. கூடவே இலகு தமிழில் அதனை சமைத்திருப்பதனால் ருசி அதிகமாகவே இருக்கின்றது. இவ்வாறான படைப்புக்கள் எம் மத்தியிலிருந்து வெளிவருவது வரவேற்கத்தக்கது.

படித்த அவரது ஒரு சில கவிதையினூடாக இயற்கையையும் அனர்த்தங்களையும் எமது அடையாளத்தேடல்களையும் மிக அழ காக அட்டவணைப்படுத்திருப்பதும் மிகுந்த சிரத்தையுடன் பக்குவ மாகவும், நேர்த்தியாகவும் ஆவணப்படுத்திய விதம் காலத்தின் கட்டா யத்தை உணர்த்தி நிற்கின்றது.

இவருக்கு ஒத்தாசையாக இவரது பதிப்புக்கு பக்கபலமாக இயங்கிய என் நண்பன் க. ஸ்ரீதாஸ் அவர்களையும்,நூலாசிரியரையும் வாழ்த்தி நூல்விழா சிறப்புற மனதார வாழ்த்துகின்றேன்.

நன்றி

அன்புடன் ரி. தயாநிதி
கவி அருவி
விடுதலையின் வேர்
பிரான்ஸ்.

# வாழ்க தமிழ்.

தமிழ்- வளமோடு வாழ எம்வாழ்வோடு இணைப்போமே.!

கருவறையில் இருக்கையிலே காதினிலே கேட்டமொழி-எம்மை
பெருவயிறு சுமந்தவளோ தினந்தோறும் பேசிய இனியமொழி
அறுசுவைபோல் எம் நாவினிலே அன்றாடம் நின்றாடுமாயின்.
வறுமை என்றும் வாராது தமிழே நீ வளமோடு வாழ்வாயே!

உறவாக பலமொழிதான் எம் வாழ்வோடு இணைந்தாலும்
மறவாது எம்மனதோடு கருவறையில் இணைந்தவளை
துறவாது பிறவியிலே பேசியறிந்தும் வருவோமானால்..
இறவாது உயிர்வாழும் இனிதான எம் தாய்மொழியே!

நிறைவாகக்கற்றவர்கள் நிலத்தினிலே யாருமில்லை
உறவாக பெற்றவரும் உதறியே தள்ளிவைத்தால்
அருமையுற பெருமைபெற அகரத்தில் உதித்தவள் -தன்
உருவழிந்து ஓசையிழந்து உலகழிந்து போவதுவா?

எம் நாவோடு நீ வாழ நலமோடு உலகாள - வளமோடு
செம்மொழியாய் பிறந்தவளே சீர் பெறுவாய் வாழ்வினிலே!
உம்மை உயர்த்திவைக்க உருப்பெற்றோர் வரிசையிலே -புலத்தில்
அம்மை இவள் பணியும் அமைந்திடவே வாழ்த்துகின்றேன்.

வாழ்க தமிழ் வளர்க அதன் பெருமையென்றும்
வருங்கால இளைஞருக்காய உங்களது முயற்ச்சியும்
அரும்பணியாம் ஆசிரியர்த்தொண்டும் சேவையும்
வளம் பெற வேண்டுமென உளமுடன் வாழ்த்துகிறேன்



வாழ்த்துபவர்-
திருமதி கலைச்செல்வி வசந்தானந்தன்
(கவிஞர்- ஆயர்வேத வைத்தியர்)
சைஸ்ற்
நெதர்லாந்து.

# எனது பார்வையில்



மனம் எங்கே இருக்கிறது என்று தெரியவில்லை. ஆனால் இன்பம், துன்பம் எதுவாக இருந்தபோதிலும் வரும் சவால்களைச்சமாளித்து அதனை பக்கு வத்தோடும் துணிவோடும் எதிர்கொள்ளும் பட்சத்தில் அவர்களே வெற்றிகளை இலகு வாக்கிக்கொள்கிறார்கள்.

தற்காலிகமான ஒரு மகிழ்ச்சியை வெற்றிகள் பெற்றுத்தந்தாலும் தோல்விகளும் வேண்டும். ஏனேனில் வெற்றிகள் என்பது நம்மால் பெற்றுக்கொள்வது. ஆனால் தோல்விகள் நமக்கு பலவற்றை கற்றுத் தருகிறது.

இவ்வாறே “சில கணங்கள்”ஆசிரியரை என் பார்வையில் பார்க்கிறேன். தான் கற்றதை, பெற்றதை, இழந்ததை நிலம் விட்டு புலம் வந்திருந்தும் தாய் நாட்டின் நேசம், மொழி மீதான பற்றுதல், உறவுகளிடமிருக்கும் உணர்வுகள் இப்படி பலவற்றை துணிவுடனும், துடிப்போடும் பகிரப்பட்டிருப்பது பாராட்டுதலுக்குரியது.

அறிவியலை நோக்கிய பயணங்கள் என்பது இன்றைய நவீன உலகில் அசுர வேகத்தில் மாறிக்கொண்டு வருவது கண்கூடு. ஆன போதிலும் இந்த மாற்றங்கள் என்பது ஆரோக்கியத்தை நோக்கி செல்லப்படுகின்றதா என்ற கேள்வியும் எழாமலில்லை. இன்னும் மாறாத மாற்றங்களுடன் நாம் வாழந்து கொண்டிருக்கிறோம் என்ற கசப்பான உண்மைதனையும் மறுத்து விடமுடியாது.

விஞ்ஞானத்தின் அபரிதமான வளர்ச்சியில் விண்ணைத் தொடுகின்ற மனிதன் மண்ணின் மனிதமதை தொட மறந்து விடுகின்றான். இவைகள் யாவும் மறு சீரமைக்கப்பட்டு நல் மாற்றங்களாய் வரவேண்டுமென்கின்ற இவ் நூலாசிரியரின் ஆதங்கம் இவர் கவிதைகளை வாசிக்கின்ற பொழுது உணரமுடிகின்றது இதனால் தான் இளையதலை முறையினருக்கான அறைகூவலையும் விடுத்து ஒரு நம்பிக்கையை விதைத்து புரையோடிப்போன கொள் கைகளை புதுப்பிக்காது அவைகளை மண் மூடிப்புதைத்து விட்டு வாருங்கள் என வழிவிடுகின்றார் இந்தக் கவிஞர்.

இவர் ஒரு ஆசிரியராக பணிபுரிந்ததினால் கவிதைகளில் கண்டிப்பும், கனிவும் பிறந்து அவைகளை சாட்சியப்படுத்தியிருப்பதும் பல கவிதைகளை பார்க்கின்ற போது பெண்களையே மையப்படு-த்தி அவர்களுக்கு ஒரு நம்பிக்கை ஊட்டுகின்றார். இன்னும் ஒரு படியாக நம் தேசம் கடந்து வந்த போதிலும் எம் நேசமிகு தமிழை, அதன் பெருமையை தான் வாழ்கின்ற நெதர்லாந்து நாட்டின் மொழி யின் ஊடாகவும் வெளிக்கொணர்ந்து வருவது பாராட்டுதலுக்குரியது. அவ்வாறான முயற்சிகளில் அவரின் ஈடுபாடானது நம் மொழியின் இருக்கும் சிறப்பை வேற்று மொழியிலும் உணரவைப்பதும்,குறிப்பாக இளைய தலைமுறை அறிந்து கொள்ளவேண்டு மென்கின்ற அவரது அக்கறையும், நாளைய நம் சமுதாயம் இவைகளைப் புரிந்து, அதனை மேம்படுத்திச்செல்ல வேண்டுமென்கின்ற சிந்தனை என்பது சிறப்புக்குரிய அம்சமாகும்.

படைப்பாளி என்பவர் யார்...? தன் படைப்புகளை படைத்து தன் புகழில் மயங்காது, மாறாக தான் கொண்ட சமூகம், அதன் பிரதி பலிப்புகளை உலகத்தின் பார்வைகளாய் பகிரப்படு வதன் மூலமே ஒரு சிறந்த படைப்பாளியாக இனம் காணமுடியும். அவ்வாறு தான் இவரைப் பார்க்கிறேன். சரி, பிழைகளுக்கப்பாற்பட்டு தான் சொல்ல வருவதை மனத்தைரியத்துடன் இயம்புவது நம் சமூகத்திடம் காண்பது குறைவான போதும் அதனை தைரியமாகச் சொல்வது, குறிப்பாக பெண்களைப் பொறுத்த வரையில் வெறும் பேசாமடந் தைகளாக இருக்காது விழிப்போடு செயல்படவேண்டும் என்பதை வலியுறுத்துகின்றார்.

சீதனம் பற்றியும் கடுமையாக சாடுவதோடு வளர்ச்சி யடைந்த நாடுகளில் நாம் வாழ்ந்து கொண்டிருந்தாலும் இன்னும் நம் மனங்களில் வளர்ச்சி அடையாதவர்களாய் இருக்கின்றோம் என்கின்ற ஆதங்கமும், அக்கறைகள் களையப்படவேண்டும் என்கின்ற இவரது அக்கறைத்தன்மையை பாராட்டுகின்றேன். இவ்வாறு தன் எண்ணக்-கருத்துக்களை, பல கோணங்களில் தந்திருக்கிறார். இன்னும் பல உயரங்களைத்தொடவேணடுமென மனதார வாழ்த்துகின்றேன்.

என்றும் தமிழ் நேசனாய்<br>
திரு. க. ஸ்ரீதாஸ்<br>
எழுத்தாளர், விமர்சகர்<br>
நெதர்லாந்து.

# ஆசிரியர் உரை



என் மனதில் பட்ட சில விடயங்களைக் காலத்திற்குக்காலம் கிறுக்கி வைத்தேன். கோபம் வரும்பொழுதும் கவலை வரும் பொழுதும் மிகவிரைவாகவே கிறுக்கு-வேன். இவைகள் எல்லாம் நூல்வடிவம் பெறும் என நான் நினைத்திருக்கவில்லை.

கால ஓட்டத்தில் பல தொலைந்தும் பதிந்து வைத்த சில தொழில் நுட்ப மாறுதல்களால் சுயவடிவம் இழந்தும் போக எஞ்சியவற்றை உங்களுடன் பகிரலாமெனத்துணிந்தேன்.

தமிழ்மொழி கற்றல் கற்பித்தலில் ஈடுபட்ட காலங்களில் எனது மாணவர்களுடனும் இளையோருடனும் தோழமையுடன் பழகிய காலங்களில் அவர்களுடன் சேர்ந்து நாடகங்கள், பட்டிமன்றங்கள், கவிதை நிகழ்வுகளில் ஈடுபட்ட தருணங்களில் அவர்களின் ஆர்வமும் ஆற்றலும் கண்டு மகிழ்வும் பெருமிதமும் அடைந்தேன். அவர்களிடம் எழுத்தாற்றல் நிறையவே உண்டு. பிற மொழிகளில் எல்லாம் எழுதிச் சாதனைகள் படைத்த நம் சந்ததியினர் தமிழ்மொழியிலும் துணிந்து எழுத வேண்டும். புதிய இலக்கியங்களை அவர்களும் படைக்க வேண்டும் என்பது எனது பேரவா.

தமிழ் மொழி சங்க இலக்கியத்தோடும், மரபுக்கவிதைகளோடும் மட்டும் மட்டுப்படுத்தப்படாது உளவியல், சமூகவியல், கலாச்சாரம், தத்துவ சிந்தனை, வாழ்க்கை, உழைப்பின் மகிமை, ஏழ்மையிலும் சிறப்பு, பெண்ணியம், போன்ற புதிய சிந்தனைகளுடன், இன்றைய மனிதர்கள் இன்றைய போக்குகள் இன்றைய எதிர்பார்ப்புகள் என்று பரந்துபட்டு காலத்தை வென்று புதிய இலக்கியங்களைப்படைத்து வீறு நடைபோட்டுச் செல்ல வேண்டும் என்பது எனது வேண்டுதல்.

கவிதைப்பூக்கள் வெறும் கற்பனையில் மட்டும் மலரவேண்டுமென்பதில்லை. அவை உணர்வு களின் வெளிப்பாடு களாகவோ, அனுபவமாகவோ, பகிர்வுகளாகவோ கூட இருக்கலாம். இக்கவிதைத்தொகுப்பின் பக்கங்கள் ஏக்கங்கள், தேடல்கள், காதல், பிரிவு, துயர், நம்பிக்கை, ஏழ்மை, இயற்கை, வாழ்வியல், சமுதாயச்சாடல்கள், அறிவுரைகள் எனப் பரந்து விரிந்து செல்கின்றன.

மனித வாழ்க்கையில் திடமான நம்பிக்கையுடன் வருங் கால சந்ததியினர் அன்பு, மனிதநேயம், மனிதாபிமானம், போன்ற நற் பண்புகளைக் கடைப்பிடித்து சமத்துவமானதொரு புதிய சமூகத்தை உருவாக்க வேண்டும் என்பதே எனது கனவு.

எனது கனவு நனவாகும் என்ற நம்பிக்கையுடன் இன்றைய தலை முறையினரிடம் எனது சில கணங்களைச் சமர்ப்பிக்கின்றேன். எனதினிய மாணவர்களே! இளை-யோரே! தோழர்களே! பேனா முனையை நிமிர்த்தி வைத்து உங்கள் சிந்தனையைத் தூண்டுங்கள்! பேனாமுனையைச் சரித்து அதைக் கொட்டி விடுங்கள்! புரட்சிகள் வெடிக்கட்டும்!

நன்றி
திருமதி. பவானி சற்குணசெல்வம்
நெதர்லாந்து.

# என் அம்மா



நான் ஒரு பெண்ணைக்கண்டேன்
அன்பின் அடையாளமாய்
ஆளுமையின் உச்சமாய்
இனிமையின் இருப்பிடமாய்
ஈகையில் வள்ளலாய்
உண்மையின் வசிப்பிடமாய்
ஊராரின் உதவியாளராய்
எண்ணத்தில் உயர்ந்தவளாய்
ஏழைக்கு இரங்குபவளாய்
ஒளியைத் தருபவளாய்
ஓங்கார நாயகியாய்

அவள் தான் என் அன்னை என்பேன்
அவள் மடி தவழ முடியாது
அவள் குரல் கேட்கமுடியாது
அவள் உடல் தழுவிய
வருடலுக்காய், அன்பு
வார்த்தைக்காய், ஆறுதலுக்காய்
என்றும் ஏங்கும் மகள்



# என் அப்பா

என் வாழ்க்கைப்படிகளில்
துணையாய் நீ இருக்க
அன்புடன் உன் கரம் பிடித்து
நடந்த அந்த நாட்கள்

என் நினைவில் வர
இதயம் ஒருகணம் சுருங்கும்

உன் உறுதியும் உவகையும்
உல்லாசமாய் நாமிருந்த கணங்கள்
ஊரெல்லாம் சுற்றி வலம்வந்த
அந்த உன்னத நாட்கள்

என் நினைவில் வர
இதயம் ஒருகணம் விரியும்

உறுதியும், பலமும்,நம்பிக்கையும்
நீ தந்த சீதனம்
அதில் கால் பதித்து
நான் நானானேன்
நீ நீயாகவே!

என் நினைவில் வர
இதயம் ஒருகணம் பூரிக்கும்

எனக்காக நீ வலி சுமந்தாய்
எனக்காக மௌனமாய் அழுதாய்
என் உயர்வின் படிக்கட்டானாய்
என் வழிகாட்டியாய் நீ இருந்தாய்
சென்று வருக!
நன்றிகள் பலகோடி!

# என் ஆசான்


அளவெட்டி ஈன்றெடுத்த பண்பாளனே- நம்
நல் ஆசான் எனப்போற்றும் பாவலனே
சீலனாய் இவ்வுலகைச்சீராட்ட வந்தாய்
சீர் தூக்கி உம்புகழ் பாடிடுவோம்

தனக்கென வாழாது பிறருக்கென வாழ்ந்து- நீர்
நற்கலை வளர்த்து ஊர் செழிக்க வைத்தீர்
ஏழைகளின் கல்வியில் அக்கறையாய் இருந்தீர்-அவர்
ஏற்றமிகு வாழ்வுக்கு வழித்துணையாய் நின்றீர்

வெயில் நாளில் நிழல் போன்ற நின்கருணையை வியந்தோம்-உம்
வெள்ளை மனச்சிரிப்பில் நாம் வேதனையை மறந்தோம்
அக்கறையாய் விசாரிக்கும் நின் ஆறுதலில் திழைத்தோம்
அழகாய் பாடுகின்ற உம் ஆற்றலினை ரசித்தோம்

தண்டிப்புலவர் போல் தமிழ் வளர்ந்து -நின்று
நல் இலக்கியச்சுவையை எமக்களித்தீர்-நீர்
வேண்டாம் இக்கொடுமையென வேதனையில் நின்றோம்-நீர்
வேங்கையாய் வந்தெமக்கு வேண்டியது செய்தீர்

துல்லியமாய் வெளிவரும் மொழியருவி யும்
கல்வியிலே ஓங்கிய உம் கலைச்சிறப்பும்
சொல்ல வார்த்தைகள் போதாது நின் சிறப்பு
என்றும் மாணவரின் உள்ளத்தில் நிலைப்பு.



# என்கடவுள்

கடவுளே! இந்தக் கடினமான
உலகில் உன்னை நான் தேடினேன்
கடவுள் இருக்கின்றாரா என
நம்புவதே கடினம்
ஆனாலும் நம்ப முயல்கிறேன்
எங்காவது கடவுள் இருப்பார் என்று
எங்காவது மேலே சொர்க்கத்தில்
அப்படியானால் ஏன் இந்தத்துன்பம்
வலி, கொடுமை, அழிவு.....-?

மனிதன் வருந்துவதற்கா பிறந்தான்?
ஏன் இந்த வெறுப்பு, அராஜகம்?
போரும், பயமும் அனர்த்தங்களும்
இல்லாத உலகில் நாம் ஏன்
வாழ முடியாது... ?

எமது அன்புக்குரியவர்களை,
நேசமுடையவரை ஏன் இழக்க வேண்டும்?
இந்தக் கேள்விகளுக்கு உம்மால்
விளக்கம் தர முடியுமா ?

உம்மை நம்ப முயல்கிறேன்
இறுதியில் உம்முடன் இணைவதற்காய்
என் வாழ்வின் ஒளி அணையும் போது
வலியின்றி உம்முடன் இணைவதற்காய்

# என்மொழி

தாயினும் இனிய தமிழ் மொழியே!
தரணி போற்றிடும் தாய் மொழியே!
பாவலர் போற்றிடும் பல்சுவை மொழியே!
பாமரர் கூடிப் பாடிடும் மொழியே!

தொன்மைமிகு தொல்பொருள் மொழியே!
தொல்காப்பியர் தரு இலக்கண மொழியே!
புலவர்கள் பாடிடும் புனை மொழியே!
புதுமைகள் படைக்கும் புது மொழியே!


பசுமை நிறைந்த பைந்தமிழ் மொழியே!
பன்மொழி மாந்தர் பகிர்ந்திடும் மொழியே!
தித்திக்கும் இனிய தீந்தமிழ் மொழியே!
தீமைகள் போக்கிடும் தோத்திர மொழியே!

துன்பங்கள் நீக்கிடும் துதி மொழியே!
இன்பங்கள் சேர்த்திடும் இன் மொழியே!
தாலாட்டுப் பாடிடும் தாய் மொழியே!
தர்மங்கள் செய்திடும் தண் மொழியே!

கவிஞர்கள் பாடிடும் கனி மொழியே!
கற்றோர் போற்றிடும் கலை மொழியே!
விண்ணோர் விதந்திடும் விந்தை மொழியே!
வீரர் புகழ்பாடும் தீர மொழியே!

வீணை நரம்பில் ஒலிக்கும் மொழியே!
விந்தை மனிதர் வியக்கும் மொழியே!
குழந்தைகள் மகிழும் மழலை மொழியே!
குவலயம் எங்கும் ஒலிக்கும் மொழியே!

காதலர் பேசிக் களிக்கும் மொழியே!
காற்றினிலே வரும் கீத மொழியே!
பாரெங்கும் உன் புகழ் பரவிடவே!
பாடுவோம் துதிப்போம் நீ வாழியவே!



# நீ அணைந்தாலும்

வழிகள் பல திறந்திருந்தும் வழிதெரியாது நின்றபோது
வழிகாட்டியாய் நீ இருந்தாய்.....
எந்தவழியும் முடிவதில்லை, முடிவதுபோல்த்தோன்றினாலும்
இன்னொரு வழி தானாய்ப்பிறக்கும் என்றாய்.

அராஜகத்தின் ஆதிக்கத்தைத் தகர்த்தெறி என்றாய்
அநியாயம் செய்வோரைத் தட்டிக்கேள் என்றாய்
சட்டத்தின் முன் இழுத்துச் செல் சத்தியம் வெல்லும்
என்றாய், ஆனால் சட்டமோ ஒரு இருட்டறை.

ஒவ்வொரு ஏணிப்படிகளிலும் ஏறத்தயங்கியபோது
என் பாதங்களைத் தூக்கி மேற்படியில் வைத்தாய்
இறங்காதே என எச்சரிக்கையும் விடுத்தாய்
விழமாட்டாய் வீழ்ந்தால் மீண்டும் என்மடியில் என்றாய்.

நீ நோயுற்ற போது கண்கலங்கி நின்றேன்
இறப்பு என்றால் என்ன என்று விளக்கமும் தந்தாய்
விளக்கம் நன்றாகத்தான் இருந்தது ஆனால்
ஆற்றொணாத்துயரம் நெஞ்சை நெருடியது.

நோயின் கொடும்பிடிக்குள் நீ சிக்கியது
எந்த விதத்திலும் நியாமில்லை
அதைப்பார்த்துக்கொண்டு இருக்கவும் என்னால்முடியாது
நோயை நீ என்னுடன் பகிர்ந்து கொள்ளவும் முடியாது
நீ அணைந்தாலும் உன் சுடர் என்னுள் ஒளியேற்றும்

# வானவில்

உன் ஒளிமுகம் நினைவில் வர
என் கண்களில் நீர் ததும்பும்
நீயோ வானவில் அதன் வர்ணஜாலத்தில்
அந்தக்கண்ணீரும் வலு இழக்கும்.

உன் அன்பு, உன் நினைவு
என் இதயவாசலைத்திறந்து வைத்தது.
நமது சங்கமம் குறுகியது ஆனால்
இனிமையானது அர்த்தம் பொதிந்தது.

என் கண்ணீரின் ஒளியிலே
உன் வானவில் உதயமானது.
உன் ஆவி பிரிந்தது
நீ விடைபெற்றுச் சென்றாய்.

அந்த ஒளியின் பிரவாகம்
ஆறுதலைத் தந்தது.
நமது அன்பு, நமது உறுதி
வானவில்லின் ஒளியில் சங்கமித்தது.

உனக்கும் எனக்கும் பாலமாக இருக்கும்
அன்பு எனக்கு உறுதி தருகிறது.
உன்னையும் என்னையும் என்றும்
பிணைத்து வைத்திருப்பது.

இந்த வானவில்லின் ஒளியில் உன்னை வைப்பேன்
அன்புடன் உன் நாமத்தை உச்சரிப்பேன்.
அந்த ஒளியில் உன் முகம் தோன்றும்.
நீ என்றும் வாழ்வாய் வானவில்லின் ஒளியாய்.



# நம்பிக்கை

நம்பிக்கைதான் வாழ்க்கை
சோகங்கள் அல்ல
துயரம் தோய்ந்த பொழுதுகளிலும்
நம்பிக்கையை கைவிடாதே!

பயம் என்பது எதிரி
அதை நீ வென்றெடு
பயம் உனைப் பீடித்தாலும்
விழித்தெழுவாய் மீண்டும்

அவ்வப்போது சிதறும் கண்ணீர்த்துளிகள்
வீழ்வதற்கல்ல வாழ்வதற்கே
எல்லாவற்றையும் இழந்தாலும்
தலையை நிமிர்த்தி நில்

சலித்துப் போன சில கணங்கள்
வெறுத்துப் போன மனிதர்கள்
ஆனால் மழைக்குப் பின் தான்
எப்பொழுதும் சூரிய உதயம்

# தனிமை

தெரிந்தோ தெரியாமலோ நான் தனிமைப்படுத்தப்பட்டேன்
எனது வாழ்க்கை ஒரு கொண்டாட்டம் அல்ல
எனக்கு வாழ்க்கை தித்திப்பாக இருக்கவில்லை
எனினும் காலச்சக்கரம் சுழன்று சென்றது.

வாழ்க்கையின் இனிமை எனக்குத் தெரியாத ஒன்று அதை
அனுபவிக்கும் துணிவும் எனக்கு இருக்கவில்லை.

நீ என் வாழ்வில் நுழைந்த போது
வாழ்வின் மறுபக்கத்தைப் பார்த்தேன்.
நீ என் இதயத்தைத் திருடியபோது வாழ்க்கை இனிமையாகவும்
இங்கிதமாகவும் மாறியது

நான் தனிமையின் பிடியிலிருந்து விடுபட்டேன்
சிறையிலிருந்து விடுபட்டது போன்ற உணர்வு
வாழ்வின் இனிய பக்கங்களைப் புரட்டினேன்
ஆனால் அது நீடிக்கவில்லை

நீ வந்த வேகத்தில் மீண்டும் திரும்பிச் சென்றுவிட்டாய்
நான் எனது சுவர்களுக்குள் பதுங்கிக்கொண்டேன்
அது எனக்குப் பழகிப்போன விடயம்தான் எனினும் இப்பொழுது
தனிமையின் வலியை அதிகமாகவே உணர்கின்றேன்.

நீ எதற்காக என் வாழ்வில் குறுக்கிட்டாய்?
தனிமை நீக்கி இனிமை சேர்க்கவா? அல்லது
இனிமை நீக்கி தனிமை சேர்க்கவா?
நான் இனிமையை அடகு வைக்கவா?.
அல்லது தனிமையில் இனிமை காணவா?.



# இளவேனில்

அதிகாலை கண்விழிக்க
ஆதவன் தன் கதிர்களைப்
பரப்பி மேலே எழ,
இருள் கிழித்து
ஒளி பரப்ப
மின்னின இலைகள்.
அமைதியை விரட்டிப்
பாடின பறவைகள்.
இளவேனில் பரப்பிய
நறுமணம் உள்நுழைய
புத்துணர்வுடன் விடிந்தது
இனிய காலைப் பொழுது.

நறுமணத்தை நுகர்ந்தபடி
சூரியவெப்பம் முகத்திற்பட
வெளியே நடந்தேன்.
பனி விலக மொட்டுகள்
சிலிர்த்து மலர்ந்தன
முயல்கள் புற்றரையில்
துள்ளி விளையாடின
இருள் விலகியது
குளிர் மறைந்தது என்று
கூறி வண்டுகள் இனிதே
ரீங்காரம் செய்தன



# உயிர்


உயிர் வாழ்கையில்
புறம் பேசுகிறாய்
போட்டி போடுகிறாய்
பொறாமைப் படுகிறாய்
பேசித் தீர்க்கிறாய்
குற்றம் கூறுகிறாய்
குறை காண்கிறாய்
ஏழனம் செய்கிாய்
பரிகசிக்கிறாய்
வாதம் செய்கிறாய்
வதை செய்கிறாய்
எள்ளி நகையாடுகிறாய்
போற்ற மறுக்கிறாய்
உயிர் பிரிந்ததும்
தொலைந்த பூசணிக்காய்
தான் பெரியது என்று
பறைசாற்றுகிறாய்
வாழும்போது பகிர்வதுதான்
வாழ்க்கை
இறந்தபின் அழுது
புலம்புதற்கல்ல!
உயிர் உள்ளவரை
அன்பைப் பகிர்
அது உயிர் பிரிந்தாலும்
உன்னுடன் வாழும்.

# பாரதி



காலத்தைக் கடந்து கனவு காணாதே
என்ற தன் தந்தையின் போதனையையும்
மீறிக் கனவு கண்டவன்தான் பாரதி
ஏன் எதற்கு என்று கேட்கத் தெரியாத மானுடம்
பின்பற்றற் படியிலிருந்து இறங்காத நிலைப்பாடு
அற்ப மாயைகளில் மயங்கிக் கிடக்கும் சமுதாயம்
கானல்நீராய், காட்சிப்பிழையாய் சொப்பனம் காணும்
அற்பமனிதர்கள்

பெண்ணடிமையை ஒழிப்போம் ஜாதியை ஒழிப்போம்
என்றெல்லாம் கோஷம் எழுப்பிவிட்டு பெண்களை
வீட்டில் பூட்டி வைத்து ஜாதிக்கொரு தராதரப்பத்திரம்
கொடுத்து பதவி கொடுத்து மண்டியிடும் நாடு
மதம் என்று கூறி சதிசெய்யும் மதங்கொண்ட மக்கள்
மாற்றங்களைக் காணாமற் கடந்து போகும் நாட்கள்
பாரதியின் கனவை நனவாக்க இன்னும் எத்தனை
பாரதிகள் வேண்டும்.




# கூண்டுக்கிளி

எல்லாவற்றையும் கடந்து
வந்துவிட்டேன் ஆனால்
உன்னைமட்டும் கடந்துசெல்ல
என்னால் முடியவில்லை
காலம் செல்லச்செல்ல
தூரமும் ஏனோ அதிகரித்தே
சென்றது ஆனால் இதயங்கள்
மட்டும் ஒன்றாக ஒருமித்து

சந்தித்தகணங்களில் நாம்
உதிர்த்த கண்ணீர் பூமியின்
வெப்பநிலை அதிகரிப்பாலும் உலரவில்லை
நீ என்னைத் தேடிவந்த நேரங்களில் எல்லாம்
நம்மை மறந்து கூடிக்குலவியிருந்தோம்

நான் என்னை முழுமையாக
உனக்குத் தந்தகணங்கள்
நீ எனை ஏற்று எடுத்த கணங்கள்
மீண்டும் பிரிந்துசென்ற நேரங்களில்
நம் இதயத்தின் வலி
ஏனோ பன்மடங்காய் அதிகரிக்க
நாம் மரங்களில் செதுக்கி வைத்த
நம் காதல் சோகங்களும்
விம்மிப் பொருமி வெடித்துப்
பெருந்தளும்புகளாக நம்கதை கூறியது




பல ஆண்டுகள் காட்டிலே வாழ்ந்தோம்
பறவைகளுக்கும் நம் கதை தெரியும்

நேற்று நான் தனியாகக் காடு சென்றேன்
நீ எங்கேயெனப் பறவைகள் கேட்டன
நீ பறந்து சென்று விட்டாய் என்றேன்
நம் சிறகொடித்துத் தருகின்றோம்
நீயும் பறந்துவிடு என்றன
பறக்க நினைத்தேன் முடியவில்லை

வலி குறையும் என நினைத்து
அழுவதில் எந்தப் பலனுமில்லை
சிரிக்கலாம் என நினைத்தால்
அதுவும் முடியவில்லை
நடிக்கலாம் என நினைத்தால்
பாத்திரம் கிடைக்கவில்லை
சென்றுவிடலாம் என நினைத்தால்
கடமை விடவில்லை

என்ன செய்வதென்றே தெரியாமல்
கூண்டுக்கிளியாய் வாழ்க்கை தொடர்கிறது.



# யாருக்கும் கேட்காது

பிரிவு வந்தபின் தான்
அதன் காரணம் தெரிந்தது
காரணம் புரிந்தபோது
காரியம் தொலைந்தது


சந்தோஷத்தை உணர
முனைந்தபோது தான்
வலியை உணர
வேண்டி இருந்தது

எதிர்பார்த்தல் ஒன்றும்
பெரிய தவறல்ல- ஆனால்
யாரிடம் எதை எதிர்பார்க்கலாம்
என்று அறிந்திருக்காததுதான் தவறு

மரமாகியபின் பிடுங்குவதைவிட
கன்றைப்பிடுங்குவது சுலபம்
மரத்தைப் பிடுங்கினால்
காய்கனிகள் கருகும்

என்னால் மனம்விட்டுச் சிரிக்க
முடிவதில்லைத்தான்- எனினும்
மற்றவர்கள் முன் அழாமல்
இருக்கப் பழகிக் கொண்டேன்

தனிமையில் நான் அழுவதெல்லாம்
மற்றவர்களுக்குத் தெரியாது
ஓவென்று ஓலமிடும் என் இதயஒலி
யாருக்கும் கேட்காது.



# சில கணங்கள்

மற்றவர்களுக்காக ஒதுக்கப்பட்ட சில கணங்கள்
நன்றிகலந்த அற்புதமான கணங்கள்
அன்பு நிறைந்த சந்தோஷமான கணங்கள்,
அவை என்றும் இனிமையானவை

நிபந்தனைகள் அற்ற நம்பிக்கையுடன்,
கண்களில் ஒளிவீச நான் உன்னை நேசிக்கிறேன்
என்று நீ கூறிய கணங்கள்.
அந்த அன்பை நம்பிக்கையை இழந்த
கணங்களில் உணரப்பட்ட வலி, துன்பம், ஏமாற்றம்

என்னதான் காரணம் என என்னை நான் கேட்டேன்
வார்த்தைகள் வேறு, நிஜம் என்பது
வேறு என்றது வாழ்க்கை.
எல்லாப் பயணங்களும் நாம் நினைத்த
இடத்தில் போய் முடிவதில்லை.
வழிதவறிப்போகும் சில பயணங்கள்தான்
நமக்கு வாழ்க்கையின் பல
பாடங்களைக் கற்றுத்தருகிறது.

எல்லாக் கணங்களையும் சந்தித்தேன்
இது சகஜம் என்பதும் எனக்குத்தெரியும்
சில கணங்களில் அழுகை மறு கணங்களில் சிரிப்பு
அதைப் பகிர்ந்த கணங்களில் விழிப்பு
அனுபவம் கரைத்தெடுத்த முதிர்வு
எக்கணத்திலும் அமைதி!

# சுடரொளி

உடலையும் உயிரையும்
பிரித்துப்பார்க்க எனக்குத்
தெரியாது
பாலையும் நீரையும்
பிரித்துண்ணவும் எனக்குத்
தெரியாது

உப்பையும் கசப்பையும்
பிரிக்க முடியுமா
உணர்வுகளை மட்டும்
எப்படிப்பிரிப்பது?

ஊன் உருகி
உடல் உருகி
உணர்வுகளும் நசிய
நான் மெழுகுவர்த்திபோல்
உருகிச் சிறுகிக்குறுகுவது
உனக்குப்புரியாது

என்னை உருக்கிப்
பிரகாசிக்கும் என்
சுடரொளிதான் உன்
கண்களுக்குத்தெரியும்
அது அணையும்வரை



# மீசை




செல்லமாய் வளர்ந்தவன்
சொத்துசுகம் படைத்தவன்
முறுக்கிய மீசைக்காரன்
இலகுவாய் உழைத்து
முன்னேறும் முனைவுடன்
விண்ணேகி மண்ணிறங்கினான்

தோடுடைய செவியன்
நீள்சடை யுடையோன்
மூக்கிலே வளையமும்
கையிலே தத்துவமாய்
முன்வந்து அமர்ந்தான்

அட்டட்டா பட்டட்டா
நீ ஆணா பெண்ணா
அலியா எனக்கூத்தாடி
இவன் தன் மீசையை
முறுக்கிக் காட்டினான்

சீறி எழுந்த அவன்
மேலங்கியை வீசிவிட்டு
தன் முறுக்கெடுத்த உடல்
காட்டி புயவலிமை காட்டி
கால்களை அகட்டி நின்று
உழைக்கும் கரங்களைக்
காட்டினான் அவன் வாழ்க...!



# எனக்காக நீ!

இருள் சூழ்ந்த முகில்களினூடாக பார்த்தேன்
பாதை தெரியவில்லை
எனக்காக நீ எப்பொழுதும் என்னை
மறக்காமல் வந்தாய்
என்னைத் துன்பம் சூழ்ந்த பொழுதுகளில்
அதைக் கடந்து செல்ல
எனக்காக நீ என்னுடன் கைகோர்த்து
எப்பொழுதும் நடந்து வந்தாய்

நான் வழிதவறிச் சென்ற போது
என் மதியைத் தொலைத்தேன்
எனக்காக நீ உன்னுள் வழிசமைத்து
எனக்கு வழிகாட்டினாய்
சூரியன் இருண்ட முகில் கிழித்து
வெளியே தலையை நீட்டினான்
எனக்காக நீ தந்த பரிசல்லவா
அதை வியந்தேன் ரசித்தேன்

ஆனால் இன்று என்னில் உணர்வில்லை
சுருதியற்ற இசையானேன்
அண்ட வெளியில் சூரியன் இல்லை
சந்திரன் இல்லை நட்சத்திரங்களும் இல்லை
நாட்கள் இருளாகவும் குளிராகவும் தொடர
நான் உன்னுடன் கழித்த
இனிமையான பொழுதுகளை மீட்டி
கண்ணீரில் மூழ்கினேன்

வலிகொண்டபோது என் இதயத்தின்
ஓலத்தை நிறுத்தவும் முடியாமல்
வாய்விட்டு அலறவும் முடியாமல்
மௌனமாய்க் கழியும் பொழுதுகளில்....

எனக்காக நீ!




# ஆணும் பெண்ணும்

ஆண்கள் வேட்டையாடுபவர்கள்
பெண்கள் இரை- ஆனால்
ஆண்கள் நல்லவர்கள்
பெண்கள் கெட்டவர்கள்
ஆண்கள் நல்லவர்கள் என்றால்
ஏன் வேட்டையாடுகிறார்கள்
பெண்கள் இரையாகுவதனாற்தானோ
கெட்டவர்களாக மாறுகிறார்கள்

ஆண்களைப்போல பெண்களும்
வேட்டையாடினால் உலகம் ஏற்குமா
ஆண்கள் இரையாகினால் இதுதான்
நியதியென்று யாரும் கூறுவாரோ
இதில் நல்லவர் ஏது கெட்டவர் ஏது
எல்லாம் வல்லவர் வகுத்தவழி
ஆணையும் படைத்து பெண்ணையும்
படைத்துவிட்டுக் கூத்துப்பார்க்கும்
கடவுளர்க்கே இதுதான் நியதியென்றால்
இதுபற்றிப் பேச எனக்கென்ன
அருகதையுண்டு?

# அந்தக்கணம்

உன்னுடன் நான் பேசலாமா?
ஆம் உனக்கும் அது புரிந்திருக்கும்
உன்னை ஒன்று கேட்கலாமா?
எப்படி அதைக் கூறுவது?
எனக்கோ தயக்கமாக உள்ளது....
அதனால்த்தான் மௌனித்தேன்.
எப்படித் தொடங்குவது என்று தெரியவில்லை
அதைத்தெரிந்து கொண்ட கணங்களில்
உன் முன்னால் வரத்தயக்கம்...
நீ என்னுடைய இதயத்தைத் திருடிவிட்டாய்
எனக் கூறத் தயக்கம்.
என் கண்களைத் குருடாக்கினாய்.
என் வாயை மூடிவிட்டாய்...
என்னால் நீ சொல்வதைக் கேட்கமட்டும்
தான் இனி முடியும்.
“அன்பே நானும் உன்னைக் காதலிக்கிறேன்”
என்று நீயாக வந்து என் காதுகளில் கூறும்வரை
இனிய கனவுகளுடன் தொடர்கிறேன்
அந்தக் கணம் வரும்வரை....





# புதுயுகம்

நடந்தவை நடந்தவைதான்,
முடிந்தவை முடிந்தவைதான்,
சொன்னவை சொன்னவைதான்,
நடந்து முடிந்தவை திரும்பிப்
பெற முடியாதவை

ஒரு கசப்பான முடிவின் பின்
எப்பொழுதுமே ஒரு புதிய ஆரம்பம்
எமக்கும். நாம் போராடினால் ....

வாருங்கள்
புதிதாக ஆரம்பிப்போம்
முதலிலிருந்து....
மன்னித்து....
மறந்து....

கவலைகளை மறந்து
கைகோர்த்து
வீறு நடைபோடுவோம்
புது யுகம் படைப்போம்
நடந்தவை முடிந்தவை
முடிந்தவை மறந்தவை
சொன்னவைக்கு மன்னிப்பு
வாருங்கள்
ஒன்று கூடுவோம்
புது யுகம் படைப்போம்.

# இரயில் பயணங்களில்

வழமைபோல் பூட்டிக்
கொள்ளும் கதவுகள்
விரைந்து செல்லும் மரங்கள்
நிற்கும் வாகனங்கள்
ஓடுவன எல்லாம் நிற்கும்
நிற்பன எல்லாம் ஓடும்
விசித்திரமான பயணம்.

சென்றடையும் இடம்
வந்துசேரும் வரை பதட்டம்
இறுதிப்புள்ளி பற்றிய கவலை
இயலுமானால் அதை விட்டுவிடலாம்
பயணத்தை ரசிக்கலாம்
செல்போனில் பாட்டை ரசிக்கலாம்
முகநூல் பார்க்கலாம்
பயணிப்பவர்களை ரசிக்கலாம்
இயற்கையை ரசிக்கலாம்

இறுதிப்புள்ளி விரைந்தும் வரலாம்
தாமதமாகவும் வரலாம்
செல்லுமிடம் கிட்டவர
சுமைகள் அதிகரிக்கலாம்
சுகமாவும் அமையலாம்
பயணம் பாதிவழியிலும் முடியலாம்
அதுவரை பயணம் இனிதே தொடரட்டும்





# பெண்

பேசா மடந்தை என்பதனாற்தானே
அவளை நீ பேசித் தீர்த்தாய்
பதிவிரதை என்பதனாற்தானே
அவளை நீ பரிகசித்தாய்
படிதாண்டாப் பத்தினி என்பதனாற்தானே
அவளை நீ அடிமையாக்கினாய்
வீசி எறியமாட்டாள் என்ற துணிவிற்தானே
அவளை நீ வீட்டினுள் பூட்டிவைத்தாய்
வேலையில்லை என்பதனாற்தானே
அவளை நீ விரட்டி விட்டாய்

இனி அவள் பேசமாட்டாள்
அழமாட்டாள்
சிரிக்கமாட்டாள்

இனி அவளை நீ என்ன செய்யப்போகிறாய்
இரண்டு விடயங்களை மட்டும் மறந்துவிட்டாய்
அவள் உன் பிள்ளைகளின் தாய் என்பதை
உன் தாயும் ஒரு பெண் என்பதை

# அஞர்




கதவு மெல்லத் திறந்தது
அவள் விழிகள் அச்சத்துடன்
அங்கும் இங்கும் உருண்டு
அங்கு வேறு யாரும் இல்லை
என்பதை உறுதி செய்தன.

தபாற்பெட்டியை நோக்கி
விரைந்தாள் பின் கடிதங்களுடன்
ஓடிச் சென்று கதவை இறுகப்
பூட்டிக் கொண்டாள்.

சென்ற ஆண்டு ஒரு அழகிய
நாய்க்குட்டியுடன் அவளை நான்
எதிர்கொண்ட போது, மாசற்ற
புன்னகையை என்மீது வீசிச் சென்றாள்.

ஆறு வருடங்களின் முன் நகர்காவலர்
சீருடையில் அவள் மிடுக்காகச்சென்ற
அழகை நான் பார்த்து ரசித்த
நாட்களும் என் நினைவுகளில்......

இன்று வேலை விட்டுத் திரும்பினேன்
நகர்காவலர்களின் ஊர்திகளால்
அவள் வீடு முற்றுகை- அவள்
ஆறுநாட்களுக்கு முன்பே
சென்றுவிட்டாள் அவளின் பின்
அந்த நாய்க்குட்டியும்.....
அமைதியில் துயில்க!



# என் அப்பிள் மரம்

பனிவிலகிய ஒரு இளவேனிலில்
நீ மொட்டவிழ்த்தாய்
இலை உதிர்த்தி நின்ற
மரங்களெல்லாம் பொறாமை
கொள்ளும் அளவிற்கு
அழகாய்ப்பூத்துக்குலுங்கி
மிடுக்குடன் நீ நின்று
இளவேனில் வந்த செய்தியை
சொல்லாமல் சொல்லி நின்றாய்

மரம் நிறைந்த பிஞ்சுகள்
காயாகி முற்றிப்பழுத்ததால்
பாரம் தாங்காமல் உன்
கிளைகளைத்தாழ்த்தியதால்
பிஞ்சையும் காயையும் கனியையும்
இலகுவாய் சுவைத்து வந்தேன்.

பனியொன்று வரவே
ஒருவாரம் வீடு விட்டுக்கிளம்பினேன்
திரும்பி வரும் வழியில் உன்னைச்
சுவைக்கும் ஆர்வம் மிக
திரும்பி வந்தவுடன் சாளரம் வழியே
உன்னைப்பார்த்தேன் உன் பழங்களின்
தோலெல்லாம் கறுப்புப்புள்ளி
பழுதொன்று வந்ததே உனக்கு என
விரைந்தொரு கனி பிடுங்கினேன்.


கரும்புள்ளி தோன்றினாலும்
சுவையில் நீ குன்றவில்லை
அழகு நிலையற்றது குணம்
மாறாதது என்று கூறி உன்
கிளைகளை தாழ்த்தி நின்றாய்!



# வாழ்க்கை

நான் உன்னை விதைப்பேன்
பராமரிப்பேன் உணவூட்டுவேன்
பாதுகாப்பேன் உன்னை என் கைகளில்
ஏந்துவேன் அன்பைத் தருவேன்
என் இதயத்தில் இருத்துவேன்
உன் இரு கால்களையும் நிலத்தில் ஊன்றி
நீ வளர்வாய் வேர்களை விடுவாய்
என் நிழலில் அல்ல ஆனால் முழு ஒளியில்
நீ வியாபித்து பர்ணமிப்பாய்

மழையை அனுபவிப்பாய் பனியை அனுபவிப்பாய்
காற்றை காற்றின் வேகத்தை அனுபவிப்பாய்
அந்த அனுபவத்தில் நீ உறுதி பெறுவாய்
வாழ்வு என்றால் என்ன என அறிவாய்
இதைத்தான் நான் உனக்குத் தரமுடியும்
உன் கனியைப் பறிக்க மாட்டேன்
உன் நிழலில் நான் ஒதுங்கமாட்டேன்
உன் அழகை ரசித்து நிற்பேன்



# விதி

பாதி வழியில் பிரிவு வந்து
எனை அணைத்துக் கொண்டது.
வாழ்வின் அர்த்தம் எனக்குப்புலப்படவில்லை
சில கணங்களில் துயர்
என்னைக் கௌவிக்கொள்கிறது
நானோ பனிக்காட்டில் ஓர் தனிமரமானேன்.

பதினொரு வருடங்களில் ஐவரானோம்
விதிசெய்த சதியால் மீண்டும் ஒருவனானேன்
தனிவழி செல் என்று சபிக்கப்பட்டேன்.
இது அவளுக்குப் புரியாத மந்திரம்.

அர்த்தமற்ற வாழ்வின்
கொடியைப்பறக்கவிட்டபடி
தனிமையின் வலிதாங்கிய
இதயத்தை சுமக்க
முடியாது சுமந்தபடி
இருட்டு வீட்டினுள் புகுந்தபோதெல்லாம்
எனக்காகக் காத்திருந்த கிளியே
நீயுமா எனைவிட்டுச் சென்றாய்

# அன்பு



இறப்பின் பின் மறுபிறப்பு உண்டா
என என்னிடம் கேட்காதே!
என்னால் அன்பைப் பற்றி
மட்டும்தான் கூறமுடியும்.

வலி மிகுந்த தனிமையினூடாக
உணரப்படும் உண்மை
அன்பை நம்புகிறேன்.

அன்பு
எம்மைவிடப் பெரியது!
காலத்தைவிடப் பெரியது!
இறப்பைவிடப் பெரியது.



# பலூன்

ஆகா என்ன இன்பம்
இது அல்லவா வாழ்க்கை
இன்பத்தடாகத்தில் மிதக்கின்றேன்
துன்பம் தெரியாத உலகம்


இறந்துபோன உறவினருடன்
சேர்ந்தொரு களியாட்டம்
பக்கத்துவீட்டுப் பறுவதமும்
வேலியால் எட்டிப் பார்த்தாள்

பழைய காதலி கலாவுடன்
ஒரு காதல் மயக்கம்
என் கன்னத்தில் முத்தமிட்டு
காதல் விழா நடத்தினாள்

நண்பர்களுடன் ஊர்சுற்றி
சினிமா பார்த்து ஒரு
கொத்து றொட்டியும் அடிச்சாச்சு
எனக் கென்ன குறை

கோவிலிலே திருவிழாவாம்
ஒருக்காய்ப் போய்ப்பார்ப்பம்
இணுவில் சின்னராசாவின் மேளம் முடிய
கண்ணன் கோஷ்டி பாடத் தொடங்கியது

விழித் தெழுந்து பார்த்தால்
நான் தெருவோரம் குப்பைத்தொட்டியருகில்
திரும்பிப் பார்த்தால் பொலிஸ்காரன்
இவனுக்குத் தெரியுமா கஞ்சாவின் அருமை.





# அகராதி

அகராதியை புரட்டிப் புரட்டி
அந்தச் சொல்லைத்தேடினேன்
அந்தச் சொல் அகராதியில்
இருக்கவில்லை

பிற மொழிச் சொல்லாக
இருக்குமோ
என அங்கேயும் தேடினேன்
அங்கேயும் இல்லை


பழைய மொழியாக இருக்குமோ
எனப்பாட்டனாரிடம் கேட்டேன்
அவருக்கும் தெரியாது

தமிழ் படித்த சட்டம்பியாரிடம்
சென்று கேட்டேன் அவரும்
தெரியாது என்றார்

புலவரை நாடினேன்
“முச்சினியம்” என்றார்
அந்தச் சொல்லும் தமிழ்
அகராதியில் இல்லை

# அது தவறா?

புலம் பெயர்ந்து சென்றாலும்
நற்றமிழ் காப்போம் எனத்
துணிந்த மறத்தமிழர் நாம்
தீயில் அவிந்து புண்பட்ட போதும்
தாய் மொழி காத்த தமிழர் நாம்
பட்டமளித்து பதவி தந்த போதும்
எட்டி உதைத்ததை விட்டுவிட்டு
அறம் காப்போம் எனத்துணிந்த
அறத் தமிழர் நாம்
என் வலுவிழந்து மண்ணில்
புரண்ட போதும், என் மொழி
காக்க துணிந்தேன் அது தவறா?



# கடலம்மா

கடலம்மா, கடலம்மா, நம்மவர்
துயரம் கண்டிலையோ- கடலம்மா!
வலை பிடித்த கைகள் - இன்று
வலு விழந்து போகலாமா?

ஏர் பிடித்து உழுத கைகள்
ஏமாந்து கிடக்கலாமா?
பார் போற்ற வாழ்ந்த இனம்
பாழ்பட்டு போகலாமா?


சீரோடு வாழ்ந்த சனம்
சீர் கெட்டு அழியலாமா?
கடலை நம்பி வாழ்ந்த மக்கள்
கண்ணீர் விட வைத்தாய்!

காட்டு விலங்குகள் போல்
கௌவிச்சென்றாய் அவருயிரை
சிறகொடிந்த பறவைகளாய்
சிதற வைத்தாய் எம்மினத்தை

சீவிக்க வழி தெரியாது
சிக்கலாக்கினாய் அவர் வாழ்வை
விடிகிறது என்று நாம் காத்திருந்தோம்
விடிந்தது வானம் தான் வாழ்வு அல்ல

விதையாகிப்போன எம்மவர் உறவுகட்கு நாம்
விழுதாகி நிற்பதைக்கூறிச்செல் கடலம்மா!
மழைத்துளி நுனி பற்றி நீவிர்
செய்தி அனுப்புங்கள் விண்ணவர்க்கு

சூரிய நரம்புகளை உடைத்து அதில்
எழுதுங்கள் எம்மவர் துயரத்தை
எழுதாத எம் அவலங்களை
எழுதிவிடு கடலம்மா
கூடி நிற்கிற்கின்றோம் நாமிங்கே
கூப்பிய கரங்களுடன்.



# மோகன மயக்கம்

அந்தி மயங்க
அடிவானம் சிவக்க
உன் விழி எனை நோக்க
என் விழி நிலம் நோக்க
என் கூந்தல் விலக்கி
நீ என் முகம் நிமிர்த்த
உன் தோள் மீது
என் முகம் சரிய
கைகள் பிணைய
உறவு விரிய
நீராட நீராட
உடல் சிலிர்க்க
இதழ் விரிய
கூந்தல் நனைய
வந்த என்னை
மீண்டும் நீ தழுவ
சீ என்று சொன்ன
என் வாயில்
உன் இதழ் பதிய
கைகள் பிணைய

உடல் வருட
உயிர் பிணைய
உடல் பிணைய
உறவு அவிழ
இரவும் நீள
மோகன மயக்கம்
மெதுவாய்க் கலைய
விழி திறந்து
வெளி நோக்க
விடிவெள்ளி முளைத்து
அது எமைப்பார்த்து
சிரிக்க- நீயும்
எனை நோக்க
நாணத்தால் சிவந்த
முகம் புதைந்தது
உன் மார்பில்....

# கந்தல்




காற்றுப்பிடிக்காத கற்பூரம்
அவள் பத்தரைமாற்றுத் தங்கம்
முந்தானைமூடி அவள் தன் காதலனை
அதில்முடிந்து வைத்த காலமும் போய்
பாவாடை தாவணியில் அவள்
பாங்காய் வயலோரம் நடந்துவர
பக்கத்து வீட்டுப் பயல்களெல்லாம்
பார்த்து ரசித்த காலமும் போய்
குடைவெட்டுச்சட்டை, சுரிதார்,
சுருக்குச்சட்டை, பொங்குசுருக்கு
கைச்சட்டை, மினிஸ்கேட், மினிகவுன்,
பிளீட்டட் ஸ்கேட் எல்லாம் போய் முடிய
பொங்கியெழுந்த கடல் நீர்
கொண்டுவந்துஇறைத்த பெருமீன்கள்
கால்கள் வழி
புகுந்து பின் உன் உடை
கிழித்துச் சென்றனவோ
அன்றில் வெங்சினம் கொண்ட
விசர்நாய்கள் கடித்துக் குதறியதால்
கந்தல் உடுக்க நேர்ந்ததோ ஏந்திழையே
நீ கந்தல் உடுக்க நேர்ந்ததோ?

# அகதி

உனது பொருட்களை எடுத்துக்கொண்டு
பறவைகளும், மனிதர்களும் பாடுமிடத்திற்கு செல்
உன்னுடைய இழப்புக்களைப்
பற்றிச் சிந்திக்காமல்
பின்புறம் திரும்பிப்
பார்க்காமல் விரைந்து செல்
அன்பைத் தேடிச்செல்,
அதன் அர்த்தத்தை
தெரிந்தவர்களிடம் செல்..!
கடந்தகால நிகழ்வுகளை
இழப்புகளை மறக்க முயல்!

துவண்டு போவதே ஒரு மனிதனுடைய
மிகப் பெரிய பலவீனம்
தோல்வி அடைந்தபின்
இன்னும் ஒருமுறை
முயற்சி செய்வதுதான் வெற்றிக்கான வழி
கரடுமுரடான பாதைகள்தான் இறுதியில்
அழகான இடங்களைச்சென்றடையும்.
கடும் உழைப்புத்தான்
இறுதியில் வெற்றியைத் தரும்.

இந்த உலகில் எங்கோ ஒரு மூலையில்
உனக்கென்று ஒரு இடம் உண்டு
அதைத்தேடு தேடிச்செல்!
உனது வாழ்க்கைக்காக போராடு!
உனது வெற்றிக்காக போராடு!
அன்பெனும் ஆயுதத்தால்.
அனைத்தையும் வென்றெடு.




# முகவரி

புலம்பெயர்ந்தபின்
பலநூறு கடிதங்கள்
கண்ணீரில் கரைந்த
மைத்துளிகள்,
நனைந்த கடதாசித்
துண்டுகள்

வீடு செல்லவும் முடியாமல்
வதிவிடமும் இல்லாமல்
நடுத்தெருவில் தத்தளிப்பு
கடிதங்கள் சென்றடைய
முகவரிகள் இல்லை
கடிதங்கள் வந்தடையவும்
முகவரிகள் இல்லை

முகவரிகள் தொலைந்தபின்
உறவுகளுக்கேது வழி
பதில் வருமா எனப்
பறவைகளிடம் கேட்டேன்
வானம் இருள் சூழ
நட்சத்திரங்கள் மறைய
கடலும் மௌனிக்க
கல்லறைகளும் மௌனிக்க
தொடர்கிறது என் பயணம்....



# யார் அறிவார்

மணவாழ்க்கை மர்மச்சிறையாகியபோது-
அவள் ஏணிகளைப் பார்த்தும்
தோணிகளைப் பார்த்தும்
ஏங்கியது உண்மைதான்

சிறையில் அகப்பட்டும் தன்
சின்னஞ்சிறுமி வேதனைகளையும்
சோதனைகளையும்
சாதனைகள் ஆக்கி
அவளைப் பூரிக்க வைக்க
கைக்கெட்டியது வாய்க்கெட்டமுன்
சம்பிரதாயப்படி சம்பந்தம்
செய்யலாமென தந்தையின்
மதியும் சதிசெய்ய
விதியின் பிடியில்
ஆதிக்க வலையில் சிக்க
வைக்க நாடுகடத்தல் முயற்சி

வாழையடி வாழையாய்
வாழமாட்டேன் நான் என்றாள்
வளர்ந்த வீடு விட்டுப் புறப்பட்டாள்
தன்வழியைத் தேடி!
இவள் மகளைப் பிரிந்து
வாடிநிற்பாளோ- அன்றி
மகிழ்வோடு வாழ்வாய் நீ
என்று வாழ்த்தி நிற்பாளோ?
யார் அறிவார்?



# மாப்பிள்ளை

வைத்தியர் இரு மில்லியன்
பொறியியலாளர் இரு மில்லியன்
கணக்கியலாளர் ஒன்றரை மில்லியன்
வங்கிக்கணக்காளர், வாத்தியார்
அரச ஊழியர் ஒரு மில்லியன்
மாப்பிள்ளை என்றால் அப்படித்தான்
வேலை வெட்டி இல்லாட்டியென்ன
முப்பது லட்சம் வைச்சால்த்தான்
தாலி கழுத்தில ஏறும்
மாவால செய்தாலும் மாப்பிள்ளை
மாப்பிளைதான்

எனக்குமோ இப்ப வயது
முப்பத்தைந்து வெளிநாடு
போக முடியாது அம்மா
தனிச்சுப்போவா
பிரச்சனையில்லை நான்
வேலைக்குப் போறனான்



# நீ நீயாகவே இரு!

உன்னை நீ எப்பொழுது முழுமையாக
ஏற்றுக்கொள்கிறாயோ
அப்பொழுது தான் உன் மனம் அமைதி பெறும்
உன் முகத்தில் ஒளி பரவும்

நீ அடைவதெல்லாம் இறைவன்
உனக்குத் தரும் பரிசு
இழப்பதெல்லாம் நீ இன்னொருவருக்குக்
கொடுக்கும் வாய்ப்பு

அழகிய புன்னகையுடன்
உண்மையைக் கூற ஏன் தயக்கம்?
உன்னை மதிக்கமாட்டார்கள் என்ற பயம்
உன்னை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்ற பயம்

அன்பை இழக்கவேண்டி வரும் என்ற பயம்
அந்தஸ்தை இழக்கவேண்டி வரும் என்ற பயம்
நீ நீயாகவே இரு!
உண்மையின் அருகில்!


# வழி

தாய்வழியே நல்வழியென
அவ்வழியே நடக்கலாமா
அறமறிந்து
ஆழமறிந்து
அரவணைத்து
காயப் படுத்தாமல்

அவ்வழிதான் சரியென
அறிவுரை கூற நான் யார்?
வழித்துணையாய் வரக் கேட்கலாம்
வராவிடில் கவலைதான்.

ஒவ்வொருவரும் தன்வழி செல்லலாம்
காரணங்களும் இருக்கலாம்
சொல்லலாம் விடலாம்
சரியெது தவறெது என்றுகூற
யாருக்கும் அருகதையில்லை
காரணங்கள் தெரியும்வரை
காரியங்கள் நடக்கட்டுமே!
விட்டுவிடலாமா?

நரம்பில்லாத நாக்கினால்
புறம்பேசித்திரிவோரை
கண்டனம் செய்யவா?
காறி உமிழவா?
ஒதுக்கி வைக்கவா?
சிரித்துக்கடக்கவா?



# ஆறு

ஆறு பார்ப்போம் வா என்று எனை அழைத்தாய்
இந்தச் சமதரையில் எங்கே ஆறு என்றேன்
ஆம் இங்கேயும் ஆறு உள்ளது என்றாய்
வெகுதூரம் அழைத்துச் சென்று ஒரு
நீரோடையைக் காட்டினாய்

இது ஆறு இல்லை மலையிலிருந்து
பாய்வதுதான் ஆறு என்றேன்
இல்லை இதுவும் ஆறுதான் என்றாய்
ஆறு என்றால் ஓசை எழுப்பும் என்றேன்

ஆற்றின் ஓசை இங்கிதமானது என்றேன்
ஓசை அற்ற ஆறு மனஅமைதி தரும் என்றாய்
மலைக் காடுகளிலிருந்து சந்தனக்கட்டை அகில்
மலர்கள் பழங்கள் எல்லாவற்றையும் சுமந்துவந்து
மனிதர்களின் மண்டையோடுகள் எலும்புகள்
அனைத்தையும் கடலில் சங்கமமாக்குவதுதான்
ஆறு என்றேன்
உன் விழி அகல புருவம் விரிந்தது!

கப்பல் ஓட்டவும் தோணி ஓட்டவும் கோடையில்
நீராடி மகிழவும்தான் ஆறுகள் எனறாய்.
என் விழிகள் ஏனோ கண்ணீர் சொரிந்தன
அக் கண்ணீரும் ஆற்று நீருடன் சங்கமித்தது.

# அற்புதம்

ஆழமான நீரில் நடப்பது அற்புதம்
அதைவிட அற்புதம்
திருப்தியுடன் மண்ணில் நடப்பது

தீயில் நடப்பது அற்புதம்
அதைவிட அற்புதம் பிறருக்கு
தீமையே செய்யாது வாழுதல்


சதுப்பு நிலத்தில் நடப்பது அற்புதம்
அதைவிட அற்புதம் வாழ்வில்
சறுக்கி விழாமல் இருப்பது

முட்களில் நடப்பது அற்புதம்
அதைவிட அதிசயம்
முட்களைப் போல மற்றவரைக்
குத்தாது வாழுதல்

காவடி எடுப்பது அற்புதம்
அதைவிட அற்புதம் பிறர்
கதைகளை காவாது இருப்பது

கால் நனையாமல் கடலைத்
தாண்டுவது அற்புதம்
அதைவிட அற்புதம் கண்ணீர்
இல்லாமல் வாழ்க்கையைக்கடத்தல்





# கூடு

பருவத்தின் வாசலிலே பச்சைக்கொடி காட்டிநின்றபோது
நீயின்றி நானில்லை என்று நீ என்னிடம் கூறிய நாட்கள்

மலையை மறைத்து நகரும் கார்மேகங்கள்
மழைநீரை உறுஞ்சிச்சிலிர்த்து நிற்கும் மரங்கள்
மெல்லெனத்தாலாட்டிச் செல்லும் தென்றல்
அனைத்தையும் நாம் ஒன்றுகூடி ரசித்த நாட்கள்

காதலில் மலர்நத மொட்டு பூவாய் விரிந்த நாட்கள்
நான் கைக்குழந்தையுடன் கர்ப்பந்தரித்திருக்கையில்
காதலை மீறி காமம் கரைபுரண்டோடியதோ?
நீ பட்டாம்பூச்சியாய் மலர்விட்டு மலர் தாவுவதை
அறிந்து மௌனமாய் மனதுள் அழுத நாட்கள்

மனச்சாட்சி உறுத்தியதோ? குடிபோதை!
குடிபோதையில் நீ கதவுதைக்கையில் பயந்த நாட்கள்
உன் கைகளினிடையே கசங்கிய நாட்கள்
நீ என்னைப்பந்தாடிப்பரிகசித்த நாட்கள்
எல்லாம் கடந்து போன நாட்கள்

ஆனால் வேலியே புல்லை மேயுமென
நான் எதிர்பார்க்கவேயில்லை - உன்
மரபணுவில் மலர்ந்த மலரையே நீ கொய்ய
முயன்றபோதுதான் நான் விழித்துக் கொண்டேன்

கூடு கலைந்தது குஞ்சுகளுடன் பறந்தேன்
நானோ இரை தேடும் பறவையாக!
நீயோ மலர் தாவும் வண்டாக!
என்றும் சமாந்தரமாக!

# வாடா மலர்

அன்றுதான் உனக்கு சத்திர சிகிற்சை நடந்த நாள்
நான் உன்னிடம் வருவதாகக்கூறியிருந்தேன்
எந்த நிலையில் இருப்பாயோ
என மனம் பதைத்தது
மயங்கியிருப்பாயோ? வலியால் துடிப்பாயோ? அழுவாயோ.....?

வைத்தியசாலையின் வரவேற்பறையில்
உன் பெயர் சொன்னேன்
c 1 பிரிவு என்றார்கள்,
என் கால்கள் மிக வேகமாக விரைந்தன.
கதவின் வாசலில் உன் பெயர் பொறிக்கப்பட்டிருந்தது
உள்ளே நுழைந்து ஆவலுடன் உன்னைப்பார்த்தேன்.

பல மலர்க்கொத்துக்களின் நடுவே நீயும்
ஒரு மலராக கட்டிலில் அமர்ந்திருந்தாய்
உனக்கு விருப்பமான ஒரு மலர்க்கொத்தை
உனக்குப்பரிசளித்த போது
அதை நீயே எழுந்து சென்று சாடியில்
நீர் நிரப்பி நேர்த்தியாய் வைத்தாய்.

நான் உனக்குப் பரிசளித்த அனைத்து
மலர்களிலும் ஏதோ ஒரு அர்த்தம்
மலர்கள் செடிக்குத்தான் சொந்தம் என்பது உண்மை எனினும்
உனக்காக அந்த மலர்களை
அன்புடன் எடுத்து வந்தேன்
உதிரப்போகும் பூவும் கூட
உயிர் வாழவே விரும்பும், துடிக்கும்.

ஒரு மலர்க்கொத்திலிருந்து இதழ்கள் மெல்ல மெல்ல
வீழ்ந்து கொண்டிருந்தன
மற்றைய மலர்க்கொத்தில்
மலர்கள் நிறம் மாறியிருந்தன
இன்னும் ஒரு மலர்க்கொத்தில்
மலர்கள் வாடித்தலைசாய்ந்தன
என்னுடைய மலர்க்கொத்தின் மலர்கள் நிறம் மாறாத
வாடா மலர்களாக.

என்னை வெளியே அழைத்துச்செல் என்றாய்
மீண்டும் அதிசயித்தேன்
ஆறுதல் எடு என்றேன்
அடம்பிடித்தாய் அழைத்துச்சென்றேன் வெளியே
இலையுதிர் காலம் மரங்கள்
பொன்நிற இலைகளைச் உன்மேலும் சொரிந்தன.

பிறப்பு, கல்வி, வாழ்க்கை, காதலென
தலைப்புகள் விரிந்தன
காதல்பற்றித்தொடங்கிய போது உன் கணவரும்
அங்கே வந்தார்
வழமை போல் அன்றும் மிக
அதிகமாகவே சிரித்தோம்
என்றும் போல் அந்தநாளும் இனிமையாகவே கழிந்தது.

# விடுதலை



வாயில் ஒரு கம்பைக் கௌவி
வெள்ளைப்புறா மேலே பறந்து போனது
மனிதர்கள் மேலே பார்த்து நினைத்தார்கள்
“இது என்ன அபூர்வம்” என்று

வீதியில் இறந்து கிடக்கும் குழந்தைக்கு மேலாக
வெண்புறா பறந்து போனது
மனிதன் அதைக் கடந்து செல்கிறான்
வாய் மூடி

தாய்ப்பால் குடித்துக் கொண்டிருக்கும்
குழந்தைக்கு மேலாக
வெண்புறா பறந்து போனது ஆனால்
தாயோ இறந்து விட்டாள் குழந்தைக்குப் பசி

தாய்நாட்டிற்காக இறந்த படைவீரனின் மேலாக
வெண்புறா பறந்து போனது
ஆனால் அரசியல் வாதிகள்
கை குலுக்கிக் கொண்டார்கள்

அமைதியாக நின்ற மனிதர்கள் மேலாக
வெண்புறா பறந்தது
இதுதான் விடுதலை என்பதை
மனிதன் புரிந்து கொண்டான்

வாயிலே ஒரு கம்பைக் கௌவி
வெள்ளைப்புறா மீண்டும் மேலே பறந்தது
மனிதர்கள் மேலே பார்த்து நினைத்தார்கள்
“இதில் என்ன அபூர்வம்”

வெள்ளைப்புறாவின் கடமை முடிந்தது
வாயில் கௌவிய தடியை மனிதனிடம்
கொடுத்து விட்டு அமைதியாய் பறந்தது
வெள்ளைப்புறா. இனி எம் கடமை

# அந்த இரவு



பனி கொட்டித் தீர்த்திருந்த ஒரு இரவில்
இரவும் பகலாய்த்தெரிந்த பொழுதொன்றில்
நாம் இருவரும் கைகோர்த்து நடக்கையில்
மரங்களில் பற்றியிருந்த பனித்துகள்களில்
பட்டுத் தெறித்ததே நிலவின் ஒளி.

அந்த மணற்சரிவில் சிறுவரோடு சிறுவராக
பனியில் உருண்டெழுந்து இரண்டு
பனிப்பொம்மைகள் போல் பயணம்
மீண்டும் தொடர
உன் முச்சின் உஷ்ணத்தில்
என் இமைமயிர்களில்
ஒட்டியிருந்த பனித்துகள்களும்
உருகிக் கன்னம்
வழியே வழிந்தோடியது.

பேச மொழிகளற்று மெனமாய்த்தொடர்ந்த
அந்தக்கணங்களில்
இரு இதயங்களின்
துடிப்பின் சத்தம்தான் எஞ்சியிருந்தது
அந்த இதய சங்கமத்தில் எழுந்த தீ அந்தப்
பனியை உருக்க எழுந்த இன்ப வெள்ளத்தில்
நாம் நீந்திச் சென்ற அந்த இரவு

# நான் ஒரு கள்வர்


நான் ஓடுகிறேன்
வீதிகளினூடாக ஓடுகிறேன்
சனநெருக்கடி உள்ள
நகரத்தினூடாக ஓடுகிறேன்
சந்தையினூடாக ஓடுகிறேன்
ஏழைகளின் குடிசைகள் ஊடாக
பணக்காரர்களின் மாளிகைகள்
ஊடாக நான் ஓடுகிறேன்.

மனிதர்களைத் தவிர்த்து
காகங்களைச் சந்திக்க ஓடுகிறேன்.
புதிதாக ஏதாவது வழி பிறக்குமா
எனத் தேடித் தேடி ஓடுகிறேன்

என்னை யாராவது துரத்துகிறார்களா
எனப் பார்த்துப் பார்த்து ஓடுகிறேன்.
கோபமுற்ற மனிதர்கள் கத்திக்கொண்டு
எனக்குக்கிட்ட வந்துவிட்டார்கள்.

நான் ஒரு கள்வர்
பணக்காரர்களால் எல்லா
முடிவுகளும் எடுக்கப்படும்
இந்த உலகத்தில்
நான் ஒரு கள்வர்

ஏழைகளின் இரத்தத்தைக்
குடித்துவிட்டு பன்னீரைக்
கொப்பளிப்பவர்கள் வாழும்
இந்த உலகத்தில்
நான் ஒரு கள்வர்



# மன்னன்


கொழும்பிலுள்ள பெருந்தெருவோரமாக
இருந்த கடையோரம் தன் மனைவியையும்
உடன் பிறந்த குழந்தையையும் குப்பை
கொட்டும் வண்டியில் வைத்து
தள்ளிக்கொண்டு வந்தான் அவன்

மானுடம் கண்டுகொள்ளாத சிசுவை
இலையான்தான் மொய்த்தது. எஞ்சியிருந்த
ஒரு துண்டுச்சேலையால் மானத்தைக் காப்பதா
மகவைக் காப்பதா என்ற போராட்டம் அவளுக்கு

ஒட்டி உலர்ந்த முலைக்காம்புகளை சப்பிக்
களைத்த குழந்தை வீரிட்டுக் கத்தியது.
வேலைக்குச் செல்லும் பெண்களும்
ஆண்களும் வீறுநடை போட்டு விரைந்தனர்

பணம் படைத்த சில நவநாகரீக மங்கையர்
எச்சிலை உமிழ்ந்துவிட்டு மூக்கைப் பொத்தினர்
இன்னுஞ்சிலர் தம் புருவத்தை உயர்த்தி
நாக்கால் மூக்கைத் தொட்டனர்.

சீருடையணிந்த பள்ளிச் சிறார்கள் முந்தியடித்துக்
கொண்டு ஓட்டமும் நடையுமாகச் சென்றனர்.
பின்னால் சென்ற ஏழைச் சிறுவன் தன் சட்டைப்
பையிலிருந்த பத்து ரூபாவை அவன் கையில்
வைத்து இந்தக் குழந்தை நாளை நாடாளும்
மன்னனாவான் என வாழ்த்திச் சென்றான்.



# விம்பம்

உனக்காகத்தான்
காத்திருந்தேன்
அந்தக் குளக்கரையோரம்
சலனமற்ற நீரில் விழும்
உன்விம்பத்திற்காய்
தலைகீழாகத்
தெரியும் மரங்களை
ரசித்த வண்ணம்.

சூரியன் மேற்கு
நோக்கி அசைய
தென்றலும் எனை
வருடிச் செல்ல
குளத்தில் விழுந்த
மழைத்துளிகளால்
அழகாய் அசைந்தன
மரங்களின் விம்பங்கள்

கல்லொன்று விழவே
கலங்கியது நீர்
உன் விம்பமும்
அதனுடன் சேர்ந்து
இதுவா தருணம்
என்றேன்

## பிரிவு

சிலநேரங்களில் வருடங்கள், மாதங்கள்,
நாட்கள் ஆகலாம் ஆனால் நடக்க
வேண்டிய விடயங்கள் நடந்தே தீரும்.

நீ என்னிடம் ஒரு வெற்றிடத்தை விட்டுச் சென்றாய்
ஆனால் உன் நினைவுகள் அனைத்தும்
ஆகாயத்தை நிறைக்கும் அழகிய நட்சத்திரங்கள்.

சூரியனின் கிரகணங்கள் எப்பொழுதும்
என்னை வந்து அடைவதில்லை ஆனால்
அதன் உஸ்ணத்தை நான் உணர்கின்றேன்
உன் அன்பைப்போல்.

அன்பிற்குரியவரை மறத்தல் அல்லது
விட்டுப்பிரிதல் என்பதெல்லாம் வாழ்ந்த
வாழ்க்கையை கவலையின்றி ரசித்துப்
பின்நோக்கிப் பார்த்தலும், வருங்காலத்தில்
எந்தவித எதிர்பார்ப்புகளும் இன்றி
வாழ்ந்துவிடுவதும்தான்.
வாழ்க்கை வாழ்வதற்கே





# சுத்தியல்


அந்தத் தராசு நிறைய
அத்தாட்சிப் பத்திரங்களையும்
சாட்சிகளையும் போட்டு
நிறுக்கச் சொன்னார்களா?

அநியாயம் புரிபவர்களிடம்
அத்தாட்சியை யார் கேட்பார்
மானுடமே மௌனித்தபின்
சாட்சிக்கு ஏதுவழி?

உன் நீண்ட இரவுகளை
அளந்து கொடுத்துவிடு
உன் அர்த்தஜாமக் கனவுகளை
பதிந்து கொடுத்துவிடு

உன் விழிவடிக்கும் கண்ணீரை
நிரப்பி அனுப்பிவிடு
உன் மெய்பட்ட துன்பத்தின் தளும்புகளை
ஒளிப்பதிவாக்கி அனுப்பிவிடு

இவை போதாதென
உன் தலைவிதியை அந்தச்
சுத்தியல்தான் நிர்ணயிக்கும் என்றால்
அது உருக்கப்பட வேண்டிய பொருள்
என உரத்துக் கூறிவிடு



# நம்பமுடியவில்லை

முள்ளிவாய்க்கால் அனர்த்தங்கள்பற்றி
நீ கூறியபோது அந்த வெள்ளையரின்
முகத்திலிருந்த எல்லா மயிர்த்துளைக்
குழாய்களையும் எண்ணி எடுத்துக்
கொண்டேன் அவை வரைந்த ஓவியங்கள்
உன்கதை கூறி நின்றன

வீடு கடந்தாய் களம் கண்டாய்
காடு கடந்தாய் கடல் கடந்தாய்
வயல் கடந்தாய் ஆறு கடந்தாய்
குளம் கடந்தாய் சென்நீர் கடந்தாய்
சேற்றில் புதையுண்டாய்
வதைமுகாம் கடந்தாய்
வலிகொண்டெழுந்து வான் கடந்தாய்
நாடு கடந்தாய்
எல்லை கடந்தொரு கைதியுமானாய்

எல்லாம் கடந்த நீ
காதல்த் தோல்வியினால்
உன் உயிரை மாய்த்தனையே
என்னால் நம்பமுடியவில்லை
காதலின் வலிமை என்பேனா
தனிமையின் கொடுமை என்பேனா
அல்லது நீர் முட்டியிருந்த வாளியினுள்
வீழ்ந்த ஒருதுளி நீரால் முற்றாக
வழிந்தோடிய நீரின் கதையா


# காடு

காடு பார்ப்போம் வா என்று
என்னை அழைத்துச் சென்றாய்
இது காடு இல்லை பூங்கா என்றேன்.
பூங்கா என்றால் பூஞ்செடிகள் இருக்கும் என்றாய்
மரங்களும் பூக்கும் மிக அழகாகவே பூத்துச் சொரியும்
என்றேன்.

எமது காட்டில் மிருகங்கள் தான் வாழும் என்றேன்.
இந்தக்காட்டில் மனிதர்களையும் பறவைகளையும் காணலாம்
என்றாய்
மனிதர்களை ஒழித்து வைக்கத்தானே காடுகள் என்றேன்
மனநோயால் வாடும் மனிதர்களை மீட்பதற்கே காடுகள்
என்றாய்


காதலில் தோல்வியுற்றோர்க்கு காடுதானே தஞ்சம் என்றேன்
காதலர்கள் கூடிக் குலவும் இடம்தான் காடு என்றாய்
வாழ்க்கையை வெறுத்தவர்கள்தான்
வனவாசம் செல்வார்கள் என்றேன்
வாழ்க்கையின் ஆரம்பமே காடு,
காட்டில் தான் மனிதன் உருவாகினான் என்றாய்.

காதல் எங்கே பிறக்கிறது என்றாய்
கண்களில்தான் பிறக்கிறது என்றேன்
கண்ணில்லாதவர்களும் தானே காதலிக்கிறார்கள் என்றாய்
காதல் மனதில் பிறக்கிறது என்றேன்
மனம் ஊனமற்றோரின்
காதல்தான் புனிதமானது என்றாய்
காதலுக்கு கண்ணும் இல்லை,
மனமும் இல்லை மதமும் இல்லை,
மொழியும் இல்லை ஒன்றும் இல்லை என்றாய்.



காதல் என்பதெல்லாம் வேறும் கனவு
கற்பனையின் ஒரு வடிவம் என்றேன்
உண்மைக் காதல் என்பது மிக அரிது,
எல்லோருக்கும் கிடைக்காது என்றாய்.
கிடைத்தாலும் ஏதோ ஒன்று வந்து
பறித்து விடுகிறது என்றாய்.
காதலில் எனக்கு நம்பிக்கை இருந்ததில்லை
மனிதர்கள் மாறலாம் என்றேன்

நவீன உலகில் மனிதர்கள் விரைவாக மாறுவதால்
காதல் அதற்கு இரையாகிறது என்றாய்
எங்களுடைய காலத்தில் வாழ்க்கை
இயற்கையோடு ஒன்றியிருந்தது என்றாய்
எங்களுடைய காலத்தில்
வாழ்க்கை விரைவடைத்து விட்டது என்றேன்




# மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல்.

முறுக்கிய மீசையுடன் தலைப்பாகை அணிந்தோர்
கவசவாகனம் புடைசூழ
ஓர் உல்லாச ஊர்வலம்
ஊரெல்லாம் கூடி ஓர் அமோக வரவேற்பு
நிறைகுடம் வைப்போரும்
பன்னீர் தெளிப்போரும்
Flying kiss கொடுப்போருமாக
வீதிகள் நிறைந்தன.
அமைதி காப்போம் நாமென
அறைகூவி நின்றனர்.

ஆரம்பம் ஒரே குதூகலம்தான்.
அழகுமங்கை தன் நீள்குழல் விரித்து
நீராடுகிறாள் என அவர்தம் பின்னழகை
ரசித்த வாலிபர்களும்,
சப்பாத்தி மணம் மூக்கைத்துளைக்க
அவர் பின்சென்ற நாய்களும்,
புதினப்பத்திரிகை நிறைய காட்டூண்
படங்களுமாக ஒரு சில வாரங்கள்
இனிதே கழிந்தன.

படிப்படியான கெடுபிடிகள்
வளவினுட் புகுந்து தென்னையில் ஏறி
இளநீர் குடிப்பதும், எலுமிச்சையில் பழம்
பிடுங்கி அதேவீட்டில் கரைப்பித்துக் குடிப்பதும்,
கோழியைப் பிடித்துச் சட்டியில் வைப்பதும்,
குளியலறைச் சாளரம் வழியாக உள்ளே பார்ப்பதும்,



நாள் முழுவதும் நிற்கவைத்தலுடன் தொடங்கி
படுகொலை, ஆட்கடத்தல், களவு, கற்பளிப்பு
என விரிவடைய

சேலையணியாப் பெண்களெல்லாம்
ஒரு நொடியில்சேலையணியவும்,
சயிக்கிளில் சென்ற பெண்களெல்லாம்
வீட்டினுள் முடங்கவும்,
மீனவரின் குடிசை பிரித்து தேனுண்ட வண்டுகள்,
மலர்களைக் கசக்கி மணற்தரையில் வீசின,
பள்ளிச் சிறார்கள் சிதைக்கப்பட்டு உயிருடன் தீயில்.
கட்டறுத்த காளைகள் கட்டுடனிருந்த கரும்பின்
சாற்றைப் பிளிந்தன. சாற்றைக் கொடுத்தவளோ
இன்றும் நடைப்பிணமாய் மெல்லவும் முடியாமல்
விழுங்கவும் முடியாமல்.......
வாய்விட்டு அழுதால் கைகொட்டி ஊர் சிரிக்கும்.
வாய்மூடி இருந்தால் மனம் குமுறி வெடிக்கும்.
மெல்லவும் முடியாமல்
விழுங்கவும் முடியாமல்.

# கதவு

கதவை இறக்கிப் பூட்டிவிட்டுச் செல் என்றாய்
பூட்டிய கதவை மீண்டும் திரும்பிப் பார்க்காதே என்றாய்
அந்தக் கதவு எனக்காக என்றுமே திறந்திருந்திருந்த கதவு.
எப்படி அதைப் பார்க்காமல் இருப்பேன்

எனக்காக இன்று எல்லாக்
கதவுகளும் திறந்து கிடக்கின்றன
பெண்களைப் பூட்டி வைக்கும் அடிமைக் கதவுகள்
அப்பாவிகளை அடைத்து வைக்கும்
ஏழு பெரும் சிறைக் கதவுகள்
பெண்களைப் பாதுகாக்கும் இல்லத்தின் கதவுகள்
சட்டமன்றக்கதவுகள். இரும்புக்கதவுகள்
மின்னியல்க்கதவுகள், காந்தக்கதவுகள்
சிறுவர்களைப் பாதுகாக்கும் கதவு

ஏன் பச்சைக்கதவு, சிவப்புக்கதவு,
கறுப்புக்கதவு, மணியடிக்கும் கதவு,
சங்கீதம் பாடும் கதவு அனைத்துமே
என் காலடி ஓசை கேட்டு விரிந்து திறக்கின்றன. ஆனால்
உன் கதவு மட்டும் ஏனோ திறக்க மறுக்கிறது
நீயோ கதவின் பின் கைதியானாய்
நானோ சிறகடிக்கும் பறவை

# எம்மைச்சுற்றி




உலகம் மிகப்பெரியது
மூலை முடுக்குகளையும் பார்!
உன்னைச் சூழப்பார்!
உன்னைத தாண்டிப்பார்!
வெளியே எட்டிப்பார்!
எங்கோ ஒரு மூலையில் அவலம்
அழுகுரல் கேட்க வில்லையா?
விடிவைத் தேடிப் பயணம்
விரைந்து செல் நீயும்!
விதைத்து விடு அன்பை!

அவர் தோள்களுக்கு மேலால் பார்!
ஆறுதல் வார்த்தை கூறிவிடு!
தனிமையின் சுமையகல
கூறிவிடு ஒருவார்த்தை!
அது போதும் அவர்க்கு

பாறாங்கல் போல் இதயம்
வாழ்க்கையில் வெறுப்பு
அவர் தம் தோள்களை
அணைத்து ஒரு வார்த்தை கூறிவிடு!
சுமைகளைப் பகிர்ந்துவிடு!
அது போதும் அவர்க்கு

இன்றோ நாளையோ காத்திருக்காதே
இதயத்தை திறந்துவிடு!
உன்னால் முடிந்தவரை பிறர்க்காக
ஒரு ஆறுதல் வார்த்தையை
ஒரு புன்னகையை
சொரிந்து விடு!




# இல்லை

இல்லை என்பதே அழகானசொல்
மற்றவரை ஏமாற்றாத சொல்
எதிர்பார்க்க வைக்காத சொல்
சந்தேகமற்ற சொல்
சந்தோஷமான சொல்
ஆழமான சொல்

பகைமை அற்ற சொல்
மயக்கமற்ற சொல்
நிம்மதியான சொல்
உண்மையான சொல்
விவாதமற்ற சொல்
ஏக்கம் தராத சொல்
ஏங்க வைக்காத சொல்
விரோதமற்ற சொல்
அதிசயமான சொல்
அற்புதமான சொல்
அதிர்ச்சியைத்தந்தாலும்
ஆக்கமான சொல்
துணிவான சொல்
துணைவரும் சொல்
கூறிப்பார் இல்லை என்று
கூடும் இன்பம் பலகோடி.

# பிரசவம்

ஈரெட்டு வயதில் திருமணம் ஐயனுக்கு நேரமில்லை
அர்த்தராத்திரியிலும் கடமை மனம்விட்டு கதைத்ததில்லை
கைகோர்த்து நடந்ததில்லை
ஐயிரண்டு திங்களில் குழந்தை
போரும் நெருங்கிடவே போராட்டம் தொடங்கிடவே
பிரிவும் வந்தது, உறவு கலைந்தது
பங்கரில் பிரசவம் தலை நசிந்த சிசு
பேசித்தான் என்ன பயன் என்று
பிறப்பிலேயே மௌனம்

முகம் பார்த்துச்சிரிக்காமல்
மூன்று மாதத்தில் முதுகு பிரட்டாமல்
தவழ்ந்து ஓடித்திரியாமல் எட்டு மாதத்தில்
எட்டி அடி வைக்காமல் படுத்த படுக்கையாய்.....
வெளிநாடு சென்றால் எல்லாம் குணமாகும்.....
மூளையில் பிராணவாயு இல்லை
வைத்தியர் கைவிரிப்பு
குழந்தைக்கு ஆயுள்குறைவு.....இடியாய் வந்த செய்தி
இனி என்ன வாழ்க்கை என உடைந்த மனம்....
கரு சுமந்த வயிறும் நொந்தது
தாயறியேன் தந்தையறியேன் என் கணவனை இழந்தேன்
வீடிழந்தேன் நாடிழந்தேன்
இறைவா என் குழந்தையையுமா?
நான் என்ன தவறுசெய்தேன்?
எனக்கேன் இவ்வளவு சோதனைகள்?

முகிலைக்கிழித்து வானவில் ஆகிவிடு!
நடந்ததெல்லாம் கெட்ட கனவென
புதிதாய் வாழ்வைத்தொடங்கிவிடு!
ஆம் உன் உடலிலும் இரத்தம் உண்டு! சதை உண்டு!
உன்னில் உயிருண்டு! திறமைகள் பல உண்டு!
உன் வாழ்வை புதிதாய் தொடங்கி விடு!
பாரதி கண்ட புதுமைப் பெண்ணாய்
சரித்திரம் படைத்து விடு!

# விதை

விதை ஒன்று விதைத்தாய் அதை எலி கொண்டு
போகுமெனப் பானையால் மூடி வைத்தாய்.
இலையொன்று வரவே ஒளிபட வேண்டுமென
பானையை எடுத்தாய்.
நரியொன்று வந்து இலையைக்கிள்ளவே மண்ணோடு எடு-
த்து அதை சாடியில் இட்டு வீட்டின் யன்னலோரம் வைத்தாய்
உரமும் இட்டாய்.

மரம் உறுதி பெற்றதென வெளியே நட்டாய்
மரமும் நன்றே சடைத்து வளர்ந்தது
வலிமை பெற்ற ஒருவன் கிளைகளை வெட்டினான்
வலி தாங்கமுடியாமல் மரமும் அழுதது.

வலியினால் உரம் பெற்று மீண்டும் சடைத்தது.
வெட்ட வெட்டத்தழைக்கும் மரமும் ஆயிற்று.
அநியாயப்பட்டவர்கள் அடியோடு மரத்தை வெட்ட
அங்கிருந்தும் முளைத்தது புதியமரம்.
வேரைப்பிரட்ட யாரால் முடியும்?
கிள்ளியோரும், வெட்டியோரும் களைத்தே போயினர்.
மரமோ வளர்ந்தது விழுதும் விட்டது.



# கவலை

எல்லா வலிகளையும் வார்த்தைகளால்
வெளியே சொல்லிவிட முடியாது
ஓசையின்றி மௌனமாகவே அழுகின்ற
ஓராயிரம் வலிகள் இங்கே
எல்லோரின் இதயத்திலும் உண்டு.

கவலைப் படுவதால் அந்த நாள்தான் தீரும்
கவலைகள் தீராது
என்னால் மாற்றமுடியாத விடயங்களை ஏற்றுக்
கொள்ள மன அமைதியைத் தா!
என்னால் மாற்றக்கூடிய விடயங்களை மாற்றுவதற்கு
மனஉறுதியைத் தா!
இந்த இரண்டையும் பிரித்து
அறிவதற்கு அறிவைத்தா
ஞானத்தைத் தா!

நட்சத்திரங்களே!
என் கவலையைக் கொண்டு செல்லுங்கள்!
நிறங்களே என் இதயத்தை நிரப்பிவிடுங்கள்!
நம்பிக்கையே என் கண்ணீரைத் துடைத்துவிடு!
அமைதியே எனக்கு உறுதியைத் தந்துவிடு!




# பொங்கியெழு

பொங்கு கடலே நீ பொங்கியெழு புதிதாக
விதியொன்று படைப்பதற்காய்ப் பொங்கியெழு.
வேரறுந்து நம் மக்கள் வாழ்ந்த போதும்
தழிழ்ப்பேரறுந்து கோகாதென்று பொங்கிஎழு

பாரினிலே தமிழினத்தின் பண்புக் கோலம்
பட்டை தீட்டி பாங்குடனே பொங்கியெழு
தமிழர் நாம் மீண்டும் இங்கே கூடுகின்றோம்
தாயகத்தின் தேவை தனைக் கூவிச் செல்வோம்

புகலிடத்தின் காதுகளில் ஒலிக்க வேண்டும்
தமிழன் புத்துயிர் பெற்று நாளை செழிக்க வேண்டும்
வழமான வாழ்விற்காய் ஒன்றிணைவோம் தமிழர்
இனமான உணர்வை மீண்டும் உறுதி செய்வோம்

பலமான இனமாகத் தலை நிமிர்வோம்
பண்பற்ற பகைவரையே வென்று நிற்போம்
பொங்கு கடலே நீ பொங்கியெழு
மீண்டும் புகழோடு வாழ்வதற்காய் பொங்கியெழு.



# உண்மைக்காதல்

நான் நாளை இறந்துவிட்டால்,
எனது காதலைப்பற்றி
மரங்களிடம் கூறிவிடு
காற்றிடம் கூறிவிடு
காதலை பற்றிப் புரிந்துகொள்ளக்கூடிய
எல்லோரிடமும் கூறிவிடு
பெண்ணிடம் கூறிவிடு
ஆணிடம் கூறிவிடு

விலங்குகளிடம் கூறிவிடு
புற்களிடம் கூறிவிடு
பூக்களிடம் கூறிவிடு
நான் உண்மீது கொண்ட காதல்
உண்மையானது என்பதை
காதல் எம்மை இணைத்தது என்பதை
நமது காதல் உண்மையானது என்பதை

நான் நாளை இறந்துவிட்டால்
நீ கவலைப் படாதே
கசப்பான கண்ணீரை விடாதே
அன்புடன் என்னை நினை

நான் நாளை இறந்துவிட்டால்
என்னுடைய அன்பைப்பற்றி
வண்ணத்துப் பூச்சிகளிடம் கூறிவிடு
நான் உன்னை நேசித்ததை
பறவைகளிடம் கூறிவிடு
என் கல்லறையில் பதிந்துவிடு

நான் உயிருடன் இருந்தால்
என் காதலைப் பற்றி
உன்னிடம் கூறிவிடுகிறேன்
நான் உன்னை எவ்வளவு நேசிக்கிறேன்
என்பதை உலகெல்லாம் கூறிவிடுகிறேன்




# பயம்

பயம் எம்மை பின்நோக்கிப்
பார்க்க வைக்கிறது.
அதனால் வருங்காலம்
பற்றியும் பயம் ஏற்படுகிறது.
நாம் இதனை உணரும்போது இன்று நாம்
பாதுகாப்பாக உள்ளது புலனாகிறது

நாம் வாழ்வது இன்று!
இக்கணப்பொழுதில் வாழ்ந்துவிடு!
இன்று எம்மால் கண்ணுக்கெட்டாத
தூரம் வரை பார்க்க முடிகிறது.
இன்று எம்மால் அன்பு
வார்த்தைகளைக் கேட்க முடிகிறது.
இன்று எம்மால் நாவுக்குச்
சுவையாக உண்ண முடிகிறது.
இன்று எம்மால் தென்றலை
உணரமுடிகிறது.
இன்று எம்மால் மலரின்
நறுமணத்தை முகர முடிகிறது.

ஒவ்வொரு நாளும்
இனிமையாக மலரட்டும்
இனிமையாக முடியட்டும்
இன்றே வாழ்ந்துவிடு!



# உன்னை நீ நேசி

சில நேரங்களில்
நீ செயலிழக்கிறாய் ஆனால்
ஏன் என்று உனக்கே தெரியாது.
நீயே உன்னைக் கேள்வி கேட்கிறாய்
நான் இப்படிச் செய்வது சரியா என்று
ஏதோ ஒன்று தடுக்கிறது அது
எது என உனக்குத் தெரியாது
அது எப்பொழுதும் புதிராகவே இருக்கும்.
நான் என்ன தவறு செய்தேன் என
நீயே உன்னைக் கேட்கிறாய்
என்னுடைய மனஆறுதலை எது
பறித்தது என்று கேட்கிறாய்
மன உறுதியற்ற நிலை
தளர்ச்சியைத் தருகிறது.
சில நேரங்களில் அதிருப்தி
அந்தக் கணங்களில் உன்னுடைய
இதயத்தைக் கேள்
உன் உணர்வுகளைக் கேள்.
உன் சுயநலத்தைத் தலைநிமிர விடாதே
உன் ஆவிக்குத் தெரியும்
உன் வாழ்வின் குறிக்கோள்
உன்னை நீ நேசி
உன்னில் நம்பிக்கை வை!

# விளக்கீடும் விளக்குமாற்றுப் பூசையும்



ஆதவன் அடிவானம் நோக்கி நகர்ந்தான்
காரிருள் மெதுவாக ஊரை மூடியது.
சிறுவர்கள் ஆரவாரமாக சிட்டி விளக்குகளை
நிரையாக ஏற்றி வைத்தனர்.
தேங்காய்ப் பாதியில் பந்தங்களைக் கொழுத்தி
வாழைக் குற்றியின் மேல் வைத்து
எரித்துக் கொண்டிருந்தார்கள்.


தேங்காய் சொட்டைத் தட்டியுண்ண
அவாவிய இளைஞர் குழுக்களும்
கோவிலுக்குச்செல்லும் பெரியோரும்
சிறார்களுமாக ஒரே கொண்டாட்டம்தான்.

மறுநாள் ஒரு சிறுமி நித்திரை விட்டெழுந்தாள்
நித்திரை முறியவில்லை. பெருவிரலைச்
சூப்பியபடி மறுகையில்
தேநீருடன் செல்லமாய் வளர்த்த
ஆட்டுக்குட்டியை பார்க்கச் சென்றாள்.
ஓ....வென்றொரு அலறல் கேட்டாள்!
ஆண் மகனின் குரல் ஓங்கி ஒலித்தது!
நித்திரை முறிந்தது
தேநீர்க்குவளை விழுந்து நொருங்கியது.
ஓடிச்சென்று பார்த்தாள்.
அடையாளம் தெரியவில்லை.



புயவலிமை கொண்ட ஒரு ஆண்மகனின்
உடலில் சிவப்புப் புள்ளிகள்.
“பாழாய்ப் போனவன் இப்படிச் செய்திட்டானே
பெற்ற வயிறு பற்றியெரியுது ......”
என்று தலையில் கை வைத்து அழுதபடி
அந்த உடலில் ஏறியிருந்த ஈக்கில்களை
ஒன்றொன்றாக மெல்ல இழுத்து
எடுத்துக்கொண்டிருந்தாள் அந்தப்பேதை.

ஆம் ஆறுபத்து நான்கு சிவப்பு ஈக்கில்கள்!
சாந்தமானவன் செய்த குற்றம்தான் என்ன?
நீதியின் முன் நிறுத்தப்படாத தண்டனைகள்.
ஏன் என்று கேட்பாரும் இல்லை எதற்கு
என்று கேட்பாரும் இல்லை.
இதைச் செய்தவனோ பெரும் புள்ளி,
செய்த தொழிலோ உயிர்காப்புப்பணி.
இதற்கு யார் சாட்சி?
அந்த 64 ஈக்கில்களும்தான்!



# சீதனம்

சீதனம் பற்றி கவியெழுத முயன்றேன்
இந்த ஏடு எனக்குப் போதுமா?
எங்கே தொடங்குவது? எங்கே முடிப்பது?
எப்படிக் கூறுவது? எதைக் கூறுவது?

காதலித்த பெண்ணைச் சீதனத்திற்காய்
கைவிட்ட கதையைக் கூறவா?
வீடு, காணி, பணம் என்று சீதனம்
கொடுத்ததை மாப்பிள்ளை வீட்டார்
அனுபவிக்க பெண் குடிசையில்
தஞ்சமாகிய கதையைக் கூறவா?

அல்லது தங்கைக்கு இனாம்
வாங்கிக்கொடுத்து விட்டு தன்
வாழ்க்கையைச் சிதைத்த
அண்ணனின் கதையைக் கூறவா?
பெண்ணாய்ப் பிறப்பதும் பாவம்
பெண்ணோடு கூடிப்பிறப்பதும்
பாவம் என்று மணவறை காணாத
ஆண்மகனின் கதையைக் கூறவா?

சீதனக் கொடுமையால் தற்கொலை
செய்த அப்பாவி பெண்ணின் கதையைக் கூறவா?
பெண்ணுக்கு வீட்டார் நன்கொடையாகக்
கொடுத்த வரதட்சனை இன்று
புற்று நோய் போல் புற்றெடுத்து
தொற்றுநோய் போல் விரைந்து
பரவி தாண்டவமாடும் காலமிது.



ஆண் படித்தால் கூடச் சீதனம்
வாங்க வேண்டுமாம் பெண் படித்தால்
கூடச் சீதனம் கொடுக்க வேண்டுமாம்
எந்த வகையில் நியாயம் இது?
பைத்தியக்காரக் கூட்டம்.
புலம் பெயர்ந்தும் பைத்தியம்
மாறவில்லை. தொற்று வருத்தமாச்சே
எப்படி மாறும்?

மங்கையரே! நங்கையரே!
சிறகை விரிக்காப்
பறைவைபோல் முடங்காதீர்!
சிறகையடித்து உயரப்
பறந்துவிடுங்கள்!
சீதனம் கேட்பவர் மேல்
எச்சிலை உமிழ்ந்துவிடுங்கள்!
அடுத்தவன் மாளிகையில்
உல்லாசமாக வாழ்வதைவிட
உன்னுடைய குடிசையில்
மானத்துடன் வாழ்வதே மேல்
என்று உன்னுடைய
ஆண் மகனிடம் கூறி வளர்!
உழைத்து வாழ் பிறர் உழைப்பில்
வாழதே என்று உன் மகனின்
காதில் ஓதிவிடு.

# கூட்டிப்பார்த்தால் மொத்தம் எத்தனை..?



அழகிய கூந்தலை அலங்கரிக்க
மல்லிகைப்பூ மாலை
உச்சிப்பட்டம் நெற்றிப்பட்டம்
மயிர்மாட்டியின் கீழ் ஜதிபோடும்
குண்டுச்சிமிக்கி
ஊரோடு ஒத்துவாழ அவள்
எடுக்கும் உன்னத முயற்சிகள்
அர்த்த ஜாமத்தில் அவள்
துயில் கலைக்கும் கனவுகளையும்
நாள்தோறும் அவள் கேட்கும்
அவலக்குரல்களையும் யாரறிவார்

முட்டி மோதிடும் முகில்கள்கூட
இசையெழுப்பிவிடும்
விரல்கள் மீட்டினால் வீணையும்
இசையெழுப்பிவிடும்
வண்டுகள் துளைத்து விட்டால்
மூங்கிலும் இசைபாடும்
மலர்களில் மோதிவிட்டால்
தென்றலும் இசைபாடும்
ஆனால் இவள்.......

இறந்தவர்கள் எத்தனைபேர் என்பதை
நீங்கள் அறிவீர்கள்
இசைக்க மறுக்கும் இதயங்கள்
எத்தனை என்பதை நான் அறிவேன்
கூட்டிப்பார்த்தால் மொத்தம் எத்தனை?



# சீட்டு

ஊரிலே உற்றத்தார் சுற்றத்தாருடன்
இணைந்து சீட்டுப்பிடித்த பழக்கம்
புலம் பெயர்ந்தும் அந்நியர்களுடன்
அது தொடர சீட்டுக் கேட்டு
சீட்டுக் கிழித்த கதைகள் பல

நண்பர்களே எச்சரிக்கிறேன்!
சீட்டைப்பற்றி இங்குள்ள
கோட்டுக்குத் தெரியாது
சட்டப் புத்தகத்திலும் அதுபற்றி
இல்லை சட்டத்தரணியும் உதவார்
நீதிமன்றம் போனால்
நீதியும் கிடைக்காது!
மீண்டும் எச்சரிக்கிறேன்!
சீட்டு வேண்டாம்
சிறுதுளி பெருவெள்ளம் எனச்
சேமித்துப் பழகுவோம்!



# கனவுகள்

எனது கோடைகாலக் கனவுகளில்
உனது உஷ்ணத்தை அனுபவிக்கின்றேன்
நமது நிபந்தனைகளற்ற காதல்ப் பயணத்தின்
நடுவழியில் ஏதோ ஒன்று எம்மைப் பிரித்தது.

இலையுதிர் காலத்தின் நசநசப்பில்
மரங்கள் இலைகளை உதிர்ப்பது
மீண்டும் புதிதாய்த் துளிர்ப்பதற்கு
என்பதை நான் உணர்கின்றேன்.

பனிக்காலத்தில் என் இதயம்
குளிரில் நடுங்கும் போதெல்லாம்
உன் நினைவு சுமந்த என் இதயத்தின்
அழுகுரலை நான் கேட்கின்றேன்.


இலைதுளிர்காலத்தில் நம் எல்லை கடந்த
காதல் நினைவுகளை காற்றில்த் தவழ விடுகின்றேன்.
நம் காதல் மீண்டும் துளிர்க்காதா என்ற ஏக்கத்துடன்
துளிர்க்கும் இலைகளைப் பார்க்கின்றேன்.

# நீ

நான் தனிமையில் கைவிடப்பட்ட கணங்களில்
நீ எனக்கு துணையாக நின்றாய்
நான் களைப்படைந்து சோர்ந்த கணங்களில்
நீ எனக்கு பலமாக நின்றாய்
நான் குளிரில் நடுங்கிய கணங்களில்
நீ எனக்கு வெப்பமாக நின்றாய்
நான் பயந்து தடுமாறிய கணங்களில்
நீ எனக்கு உத்தரவாதமாய் நின்றாய்

நான் புதைகுழியில் நின்ற கணங்களில்
நீ எனக்கு பூமியாக நின்றாய்
நான் உன்னை விட்டுச் சென்ற கணங்களில்
நீ என்னைப் பின் தொடர்ந்தாய்
என்னை இருள் சூழ்ந்த கணங்களில்
நீ நம்பிக்கை ஒளியை வீசினாய்
என்னுடைய மன அழுத்தம், சுமைகளை
உன்னில் இறக்கி வைத்தேன்

என்னுடைய கனவுகளையும்
எதிர்பார்ப்புகளையும்
நீ நிஜமாக்கினாய்
என்னுடைய சந்தோசத்தை நான்
உன்னுடன் பகிர்ந்தேன்
உன்னை நான் நினைப்பதால்
உன்னுள் நான் வாழ்வதால்
என் மூச்சில் நீ வாழ்வதால்
அதனால் நான் வாழ்வதால்
உனக்காகவே நான் வாழ்வதால்
நான் எதற்காக வாழவேண்டும்
என்பதை நீ எனக்கு கற்றுத்தந்ததால்
என் நினைவில் உன் இருப்பு



# சுதந்திரம்

வாழ்க்கை கைவிடப்படலாம்
அனுபவிப்பதை விட விபரிப்பதே அதிகம்
இதுதான் தருணம் புறப்படுவோம்
நாங்கள் கனவு காணும் இடங்களுக்கு
நம் தலைக்குள் பயணித்துக்கொண்டிருக்கும்
மனதிலுள்ள காட்சிகளைக் காண
நமது தேவைகளை நம்பி அதை
அலங்கரிப்போம் அனுபவிப்போம்
இன்று சுதந்திரம்
இன்னும் ஏன் தாமதம்
நாம் நடக்கும் பாதையிலே
சுதந்திரத்தை எதிர்கொள்வோம்



# நோய்

நோய் என்று ஒன்று இல்லை
அதை நாமே உருவாக்குகின்றோம்
“நோய்க்கு இடம் கொடேல்” இடம்
கொடுத்தால் அது குடி கொள்ளும்


இயற்கையுடன் ஒன்றி வாழ்
ஆட்டுக்குட்டி போல் துள்ளி விளையாடு
அணில் போல் மரமேறி பழத்தைப்புசி
மீன் போல் பாங்காய் நீந்திவிளையாடு

வீட்டுத்தோட்டத்திலுள்ள இலைதழைகளை உண்
நற் காய்கறிபழங்களை உண்
தானியங்களைத் தேடிச்சமை
பக்குவமாய அதைப்பரிமாறு

தினமும் உடற்பயிற்சி தியானம்
செய்தால் மனமும் வளப்படும்
ஆடிப்பாடி தொழில் புரிந்து
ஆறுமணி நேரம் நித்திரை செய்

நோய்வந்த உடன் மருந்துகளை விழுங்காதே
அது உன்னை விழுங்கிவிடும்
மருந்துகள் உன் உடலில் சென்று
ஒன்றுடன் ஒன்று சண்டை போட்டு
இன்னொரு நோயை உருவாக்க
நீ இன்னொரு மருந்தை விழுங்க
அதுவும் மற்ற மருந்துகளுடன்
சண்டைபோட இப்படியே
தொடர்கதையாகிவிடும்.

உன் கதை அப்படியானால்
உன் குடும்பத்தின் கதை கேள்விக்குறி
அந்தக்கேள்விக்குறிக்குள்
சிக்கித்தவிக்கும் நம்
குழந்தைகள் கதி என்ன?
ஆரோக்கியமான குடும்பம்
ஆரோக்கியமான சமுதாயம்.




# கொழுந்து

மலையிலே வீடிருக்க
மதுரையம்மன் தொணையிருக்க
கனக்கக் காசு உழைக்கவென
கண்டிச்சீமை நாடி வந்தோம்

மழையும் அடிச்சு ஊத்துதெடி
லீச்சு அட்டை கடிக்குதெடி
கட்டை காலில் குத்துதெடி
கவனமாய் நடவுங்கடி

குனிந்து நின்று கொழுந்தெடுத்து
இடுப்பொடிஞ்சு போனதடி
தோட்டஞ் சுத்துங் கங்காணி
தொரத்தித் தொரத்தி வாறாண்டி

உழைச்சுழைச்சு ஓஞ்சுபோனோம்
காலில் போடும் செருப்புமானோம்
தோட்டக்காரத் துரைமாருக்கு
ரேஸ் ஓடும் ஜுப்புமானோம்



# சந்தர்ப்பங்கள்

சந்தர்ப்பம் சூழ்நிலைகளுக்கு ஏற்றபடி
வாழப்பழகு என்று கூறுவார்கள்.
ஆனால் சந்தர்ப்பங்கள் உன்னிடம்
எதைக் கேட்கின்றன?
உன் உலகத்திற்கு வெளியே மேலே
சென்று தலைகீழாகத் தொங்கிய
வண்ணம் கீழே பூமியைப்பார்

ஒரு கணம் உன்னை,
உன் ஆசைகளை
உன் தேவைகளை மற
மற்றவர்களைப்பார்
அவர்களின் தேவைகள்
அவர்களின் வாழ்க்கை
முறைகளைப் பார்

உன் சுயநலத்தைத்
தாண்டிய ஒரு முழுமனிதனாய்
இரண்டையும் ஒப்பிடு
அப்பொழுது தெரியும்
சந்தர்ப்பங்கள் உன்னிடம்
எதைக் கேட்கின்றன என்று.
உன் இதயத்தை
திறந்து வாழ்!

# என் நினைவுகளில்

நினைவில் ஆழ்ந்தபடி கடற்கரையில் நடக்கிறேன்
வீசும் காற்றை எதிர்த்து நடக்கிறேன்
எனது வாழ்க்கைப் புத்தகத்தை புரட்டிப் பார்க்கிறேன்
அதன் நல்ல அத்தியாயங்களை இரை மீட்கிறேன்

எத்தனை எத்தனை ஆயிரம் கனவுகள் என் மனதில்
அதில் எத்தனை கனவுகள் நனவாகின?
செய்ய நினைத்ததெல்லாம் செய்து முடித்தேனா?
அல்லது அதிகூடிய எதிர்பார்ப்பா?

நான் சிறுமியாக இருந்தபோது அடையவிரும்பியவை
பற்றி ஒரு கண்ணோட்டம்
அதில் புதைந்திருந்த கனவுகளில் மூழ்குகின்றேன்
அவற்றில் சிலவற்றையாயினும் அடைந்தேனா?
மேலும் பல கேள்விகள் என்னுள் எழுகின்றன.

தயங்கித் தயங்கிக் கடல் நீரில் இறங்குகிறேன்
என்னைப் போல் பலர் மனதில் கேள்விகள்
இவற்றிற்கு மீண்டும் விடை கிடைக்குமா?
கடலின் அலைகள் உயர உயர
அவை வந்து என்னை மோத மோத
என் நினைவுகளும் உயர்கின்றன
தலை மேலே உயர உயர மீண்டும்
முயல்கின்றேன்.
வாய்ப்புக்களை நாமே உருவாக்குவோம்.





# வாடியமலர்

வாடிப்போன மலர்களைப்போல
உலர்ந்து போன பழங்களைப்போல
அன்பும் மெல்ல மெல்ல குறையலாம்
காதலும் கசந்து போகலாம்

கண்டதும் காதல் கொண்டதே கோலம்
பத்துத்திங்களில் பாங்காய் ஒரு மகவு
காதலைப்பேச நேரமும் இல்லை
கை கோர்த்து நடக்கும் ஆசையுமில்லை

பரிவு இல்லை பாராட்டு இல்லை
அன்பு இல்லை ஆசை இல்லை
கருத்து இல்லை கதை இல்லை
மலர்ந்த காதல் வாடியதும் ஏனோ

தாலாட்டுக்கேட்காத குழந்தை
அன்புக்காய் ஏங்கும்
தாயின் கண்ணீரில் நனைந்தபடி
பால் குடிக்கும். வீட்டின்
இடி முழக்கம் கேட்டு அதிரும்
விடிவுண்டோ எனக்கென்று
வீரிட்டுக் கத்தும்



# காதலும் காமமும்

விழிவழியேகும் காதல் விரைந்து
நிறைந்து மூட்டிய காதல்த்தீ
எழுப்பிய விரகதாபம்
காமசூத்திரத்தின் வழியேகி
காமனையும் வென்று
தணிக்கப்படலாம்.
அது இருவழிப்பயணமெனில்
காதலுடன் காமமும் கலந்த
மென்புணர்ச்சியாம்.

அஃதன்றி தன் உடலிச்சை
தீர்க்கவென ஒருவழிப்பயணமாய்
வன்புணர்வு செய்பவன்
கணவனாய்க்காதலனாய்
கண்ணாளனாய் இருந்தாலும்
அவன் காமுகனே!



# பந்து

எனதருமை மகளே!
தேன்மொழியே!
பொற்கொடியே!
பூமகளே!

எந்தக் கயவர்கள் உன்னைக்
கரபந்தாடினரோ
பந்தாடிப் பந்தாடிக்
காற்றுப்போன உன்னை
மீண்டும் மீண்டும்
காற்றடித்துக் காற்றடித்துப்
பின் பலர் சேர்ந்துன்னைக்
காற்பந்தாட அடிபட்டு
அடிபட்டு நொந்து
பிரண்டு மோதி வெடித்து
ஒரு மூலையில் ஒதுங்கினாய்
ஆயிரத்தில் ஒருவர்
உன்னை மீள்தயாரிப்புக்கென
தொழிற்சாலையில் சேர்க்க

நீ மீள்வடிவம் பெற்று
அழகிய மரமாக
மீண்டும் பலரைக் கவர்ந்தாய்
ஆபத்து ஒன்றும் இல்லையே?


# மனைவி மகள்

உன் மகளை மட்டும் சீராட்டிப்
பாராட்டி அவள் மழலை கேட்டு
செல்லமாய் அவளைத் தாலாட்டி
தோளிலே சுமந்து பாடம் கற்பித்து
கலைச்செல்வியாய் கட்டித்தங்கமாய் வளர்க்கிறாயே

உன் மனைவியையும் அவள்
பெற்றார் உன் மகளைப் போலதானே வளர்த்திருப்பார்கள்
அவளை மட்டும் ஏன் நீ வதைத்து
சிதைத்து மடக்கி முடக்கி
அலங்கோலப்படுத்தி சதி செய்கிறாய்?

இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கும்
உன் மகளுக்கு நாளை கன்னிகாதானம்
செய்யும் போது மணமகனின் காதுகளில்
நீ எதை ஓதப்போகிறாய்?





# தூரிகை


அவன் பிடுங்கிய மயிர்க்கற்றையைத்
தூரிகையாக்கினாள்
தன் யோனியிலிருந்து பாய்ந்த
குருதியை மையாக்கினாள்
பளிச்சிடும் ஓவியம் வரைந்தாள்
அதன் ஒளியில் அவனைக் குருடாக்கினாள்

அவன் நசித்த நரம்பைப்
பிடுங்கியெடுத்தொரு
யாழ் மீட்டினாள்
அந்த முகாரியினால்
அவனைச் செவிடாக்கினாள்

அவன் பிசைந்த மார்பு கசக்கிப்
பிழிந்த அந்த
நீல இரத்தம் கலந்த பாலை
அவன் வாயில் ஊற்றி
அவனை ஊமையாக்கினாள்

அவள் திரும்பிப் பார்க்கவில்லை
திரும்பிப் பார்க்கவேயில்லை
என் பழி தீர்த்தேனென
தன்வழி தவறாமல் செல்கிறாள்

# சில கணங்கள்



என் பிறப்பு ஒரு அதிசயம்
என் வாழ்வு மிக அற்புதம்
அர்த்தங்கள் நிறைந்தது.
அதில் பல அத்தியாயங்கள்
முடிவு எப்படியோ
நான் அறியேன்.

எனினும் என் வாழ்க்கையில்
நான் சந்தித்த சில கணங்களையும்
நான் சந்தித்த பலரின் பகிர்வையும்
நினைவோட்டமாகக்கிறுக்கி வைத்தேன்.
அதற்கு சிலர் கவிதை என்று
பெயர் வைத்தனர்.

எது எப்படியிருப்பினும்
அதை உங்களுடன் பகிர்கின்றேன்.
சில நேரம் அழுதேன்
சில நேரம் சிரித்தேன்
மற்றவர்கள் தம் துயர்களை
என்னுடன் பகிர்ந்த நேரங்களில்
தான் நினைத்தேன் நான் பாக்கியசாலி என்று!

இதை வடிவமைத்த திரு. க . ஸ்ரீதாஸிற்கும்
விமர்சனம் செய்த வித்தகர்களுக்கும்
இதை வாசித்த உங்களுக்கும்
எனது மனமார்ந்த நன்றிகள்!



இக்கவிதைத்தொகுப்பில் உள்ள கவிதைகள்
காயாகிப் பழமாகிக்கனிந்த காதல்,
தாவிப்படரத் துடிக்கும் கொடி, பெண்ணியம்,
சமூக அவலங்கள், புலம்பெயர் வாழ்வு,
உழைப்பு, ஏழ்மை,பிரிவு, ஆற்றாமை,
துயர், எனப் பரந்துவிரிந்து செல்கின்றன.

மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல்
பேசவும் முடியாமல், அழவும் முடியாமல்
தத்தளிக்கும் பலரின் குரலாக இவைகள் ஒலிக்கின்றன.
மாணவர்களே! இளையோரே! தோழர்களே!

இக்கவிதைத்தொகுப்பு பற்றிய
உங்களுடைய அபிப்பிராயங்களை என்னுடன்
பகிருங்கள்.